# இடைக்கால இலக்கியங்கள் மற்றும் சிற்றிலக்கியங்கள்
# (FOUNDATION TAMIL-MCQ)



ஆசிரியர்
முனைவர்.செ.புனிதா எலிசபெத்

# இடைக்கால இலக்கியங்கள் மற்றும் சிற்றிலக்கியங்கள்

FOUNDATION TAMIL- MCQ

## சமய இலக்கியங்கள்

## அலகு-1

அ. திருவாசகம் _ திருச்சதகம் _ அறிவுறுத்தல்

1 முதல் 10 பாடல்கள் ( 8 தவிர)

‘ நாடகத்தே உன் அடியார் போல் நடித்து'

ஆ. திருப்பாவை _ **ஆண்டாள்**. 1 முதல் 10 பாடல்கள்

இ.சித்தர் பாடல்கள் - குதம்பைச் சித்தர்

21 முதல் 30 பாடல்கள்

ஈ. திருவருட்பா - ஆறாம் திருமுறை

தனித்திரு அலங்கல் 10 பாடல்கள்

இராமலிங்க அடிகள்

உ. குணங்குடி மஸ்தான் சாகிபு பாடல்கள்

எக்கால கண்ணி 1முதல் 10 பாடல்கள்

ஊ. இரட்சணிய யாத்திரிகம்- இரட்சணிய சரித படலம்

376 - 400 பாடல்கள்

## அலகு-2 சிற்றிலக்கியங்கள்

அ. முத்தொள்ளாயிரம்

சேரன் - 3, 6, 16 பாடல்கள்

சோழன் - 25, 30, 35 பாடல்கள்

பாண்டியன் - 58, 61, 90 பாடல்கள்

ஆ. நந்திக்கலம்பகம் - 35, 36, 37, 38, 39 பாடல்கள்

இ. மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்

தாலாட்டுப் பருவம் - 23

சப்பாணிப்பருவம் - 37

வருகைப் பருவம் - 59

அம்மானைப் பருவம் - 79

நீராடற் பருவம் - 83

ஈ. தமிழ்விடுதூது -19முதல் 33 வரை கண்ணிகள்

உ. கலிங்கத்துப்பரணி - கூழ் அடுதல் 504-534

ஊ. திருக்குற்றாலக்குறவஞ்சி

பந்தடி பயிலுதல், பந்தாடிய சிறப்பு

பந்தாடலின் சிறப்பு - 6 பாடல்கள்

## அலகு-3 சிறுகதை

சிறுகதைத் தொகுப்பு

## அலகு-4 இலக்கிய வரலாறு

அ. பன்னிரு திருமுறைகள்

ஆ. நாலாயிர திவ்ய பிரபந்தம்

இ. சைவத் திருமடங்களின் தமிழ்ப்பணி

ஈ. இலக்கண நூல்கள்

உ. உரையாசிரியர்கள்

ஊ. சிற்றிலக்கியங்கள்

எ. பதிணென் சித்தர்கள்

# அலகு-5 மொழித்திறன்

அ. பகுபத உறுப்பிலக்கணம்
ஆ. ஆகுபெயர்
இ. தன்வினை, பிறவினை, செய்வினை, செயப்பாட்டுவினை, நேர்கூற்று, அயற்கூற்று
ஈ. உடம்படுமெய்
உ. மயங்கொலிச் சொற்கள்
ஊ. நேர்காணல்
எ. கடிதம் எழுதுதல்
1. விண்ணப்பக் கடிதம்
2. அலுவலகக் கடிதம்

# பொருளடக்கம்

| அலகு | வினாக்கள் |
|---|---|
| அலகு–1 | 1 முதல் 171 வரை |
| அலகு--2 | 172 முதல் 310 வரை |
| அலகு–3 | 311 முதல் 360 வரை |
| அலகு–4 | 361 முதல் 435 வரை |
| அலகு–5 | 436 முதல் 580 வரை |

# அலகு- 1

## திருநாவுக்கரசர் தேவாரம்

1. நாடகத்தா லுன்னடியார் போல்நடித்து நானடுவே என்று பாடியவர்
அ. சுந்தரர் ஆ. திருஞானசம்பந்தர் இ. திருநாவுக்கரசர் ஈ. மாணிக்கவாசகர்
**விடை: இ**

2. திருநாவுக்கரசரின் இயற்பெயர் யாது?
அ.அப்பர் ஆ. வேதியர் இ.மருள்நீக்கியார் ஈ. சம்பந்தர்
**விடை: இ**

3 திருநாவுக்கரசரின் குலம் யாது?
அ. சைவம் ஆ. சமணம் இ. வேளான் குலம் ஈ. உழவர் குலம்
**விடை: இ**

4 திருநாவுக்கரசரின் பெற்றோர் யாவர்?
அ. புகழனார், திலகவதி
ஆ. சுந்தரர், மாதினியார்
இ. கலிப்பகையார். மாதினியார்
ஈ. புகழனார், மாதினியார்
**விடை: ஈ**

5. திருநாவுக்கரசரின் தமக்கையார் பெயர் யாது?
அ. திலகவதியார்
ஆ. புனிதவதி
இ. மாதினியார்
ஈ. பார்வதி
**விடை: அ**

6. திலகதியாருக்கு திருமணம் பேசி முடித்தவர் யார்?
அ. சம்பந்தர்
ஆ. சுந்தரர்
இ. வாசுதேவன்
ஈ. கலிப்பகையார்
**விடை: ஈ**

7 திருநாவுக்கரசரது பாடல்கள் உள்ள திருமுறைகள் யாவை?
அ. 4.5. 6ஆம் திருமுறை
ஆ. 1,2, 3ஆம் திருமுறை
இ. 7-ஆம் திருமுறை
ஈ. 8 -ஆம் திருமுறை
**விடை: அ**

8. திருநாவுக்கரசரது ஊர் எது?
அ. திருமழப்பாடி
ஆ. புத்தூர்
இ. திருவாமூர்
ஈ. திருவாதவூர்
**விடை: இ**

9. திருநாவுக்கரசர் பாடிய பதிகங்கள் எத்தனை?
அ. 4000
ஆ. 4900
இ. 3200
ஈ. 3700
**விடை: ஆ**

10. திருநாவுக்கரசருக்கு 'அப்பர்' என பெயரிட்டவர் யார்?
அ. திருஞானசம்பந்தர்
ஆ. சிவன்
இ. சுந்தரர்
ஈ. புனிதவதியார்
**விடை: அ**

11. தாண்டக வேந்தர் என்று அழைக்கப்படுபவர் யார்?
அ. சுந்தரர்
ஆ. திருநாவுக்கரசர்
இ. மாணிக்கவாசகர்
ஈ. அருணகிரியார்
**விடை: ஆ**

12. நாவுக்கரசரை ஆட்கொள்ள சிவபெருமான் கொடுத்த நோய் எது?

அ. தலைவலி
ஆ. சூலைநோய்
இ. கொலை நோய்
ஈ. வாத நோய்
**விடை: ஆ**

13. யாரின் வேண்டுகோளுக்கிணங்கி பெருமான் மருள்நீக்கியாருக்கு சூலைநோயைக் கொடுத்தார்?
அ. திலகவதி
ஆ. மங்கையர்கரசி
இ. புனிதவதி
ஈ. குலசிறையார்
**விடை: அ**

14. சூலைநோய் என்றால் என்ன?
அ. கால் வலி
ஆ. தீராத வயிற்றுவலி
இ. தலை வலி
ஈ. வாதம்
**விடை: ஆ**

15. திருநாவுக்கரசரை சமண சமயத்தில் இருந்து சைவத்திற்கு மாற்றிய மன்னன் யார்?
அ. மாறன்
ஆ. ராஜராஜசோழன்
இ. இரண்டாம் மகேந்திரன்
ஈ. முதலாம் மகேந்திரவர்மன்
**விடை: ஈ**

16. 'சங்கரன்' என்று அழைக்கப்படுபவன் யார்?
அ. திருமால்
ஆ. நான்முகன்
இ. இந்திரன்
ஈ.சிவன்
**விடை: ஈ**

17. மண்ணுலக மாது யார்?
அ. பூமாதேவி
ஆ. பார்வதி
இ. லட்சுமி
ஈ. சரஸ்வதி
**விடை: அ**

18. கொன்றை மாலையை அணிந்தவன் யார்?
அ. திருமால்
ஆ. முருகன்
இ. விநாயகன்
ஈ. சிவன்
**விடை: ஈ**

19. மீன் கொடியை உடையவன் யார்?
அ. கண்ணன்
ஆ. நான்முகன்
இ. மன்மதன்
ஈ. ஈசன்
**விடை:இ**

20. மன்மதனை எரித்தது யார்?
அ.உமாதேவி
ஆ. ஈசன்
இ. நான்முகன்
ஈ. சூரியன்
**விடை: ஆ**

21. இறந்தவர்களின் தலைமாலையை அணிந்தவன் யார்?
அ. இந்திரன்
ஆ. யமன்
இ. சனீஸ்வரன்
ஈ. ஈசன்
**விடை:ஈ**

22. எட்டுருவானவன் யார்?

அ. திருமால்
ஆ. சிவன்
இ. நான்முகன்
ஈ. முருகன்
**விடை: ஆ**

23. மலையரசனின் மகள் யார்?
அ. உமாதேவி
ஆ. இலட்சுமி
இ. ஆண்டாள்
ஈ. சரஸ்வதி
**விடை: அ**

24. ‘வா என எம்மை அழைத்து ஆள்பவன் தேவரின் தலைவனான சிவபிரானே என்று கூறியவர் யார்?
அ. சம்பந்தர்
ஆ.சுந்தரர்
இ. திருநீலகண்டர்
ஈ. திருநாவுக்கரசர்
**விடை:ஈ**

25. சைய சமய குரவர்கள் எத்தனைப் பேர்?
**அ. 4 பேர்**
**ஆ. 63 பேர்**
**இ. 12 பேர்**
**ஈ. 3 பேர்**
**விடை: அ**

26.திருவாசகம் யாருடைய காலத்தில் தோனறியது?
அ. களப்பிரர்
ஆ. சோழர்
இ. சேரர்
ஈ. பல்லவர்
**விடை: ஈ**

27. தேவாரம் யாருடைய காலத்தில் தோன்றியது?

அ. களப்பிரர்
ஆ. சோழர்
இ. பல்லவர்
ஈ. பாண்டியர்
**விடை: இ**

28. தேவாரத்தை எத்தனைப் பேர் பாடினர்?
அ. 5
ஆ.4
இ.8
ஈ.3
**விடை: ஈ**

29. சம்பந்தரின் மரபு என்ன?
அ. வைணவ மரபு
ஆ.அந்தணர் மரபு
இ.சைவ மரபு
ஈ. பல்லவர் மரபு
**விடை: ஆ**

30. தெய்வத்தைப் பற்றிய இன்னிசைப் பாட்டுக்கு என்ன பெயர்?
அ. தேவாரம்
ஆ. திருவாசகம்
இ. இசைப்பாட்டு
ஈ. திருப்பாவை
**விடை: அ**

31..நின்றசீர் நெடுமாறன் என்ற பாண்டியனை சமணத்திலிருந்து மீட்டு சைவராக்கியவர் யார்?
அ. திருநாவுக்கரசர்
ஆ. சுந்தரர்
இ. திருஞானசம்பந்தர்
ஈ. மாணிக்கவாசகர்
**விடை: இ**

32. மூன்று வயதில் உமையம்மையிடம் ஞானப் பால் உண்டு சிவஞானம்

பெற்று தேவாரம் பாடியவர் யார்?
அ. திருநாவுக்கரசர்
ஆ. திருஞானசம்பந்தர்
இ. சுந்தரர்
ஈ. மாணிக்கவாசகர்
**விடை: ஆ**

33. அப்பர் என்று அழைக்கப்படுபவர் யார்?
அ. திருநாவுக்கரசர்
ஆ. சுந்தரர்
இ. சம்பந்தர்
ஈ.திருமூலர்
**விடை:அ**

34. திருநாவுக்கரசர் எத்தனை ஆண்டு வாழ்ந்தார்?
அ. 16
ஆ. 82
இ. 71
ஈ. 81
**விடை:ஈ**

35. 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்று கூறியவர் யார்?
அ. சம்பந்தர்
ஆ. சுந்தரர்
இ. திருநாவுக்கரசர்
ஈ. அநபாயன்
**விடை: இ**

36. நாவுக்கரசர் பாடிய பாடல் எது?
அ. தேவாரம், திருவாசகம்
ஆ. தேவாரம் திருப்பாவை
இ. தேவாரம் திருத்தாண்டகம்
ஈ. திருவாசகம், திருத்தாண்டகம்
**விடை: இ**

37. “ஏழிசையாய் இசைப்பயனாய் என்னுடைய தோழனுமாய்” எனறு

இறைவனைப் பாடியவர் யார்?
அ. சுந்தரர்
ஆ. மாணிக்கவாசகர்
இ. திருமூலர்
ஈ. சேக்கிழார்
**விடை: அ**

38. தம்பிரான் தோழர் யார்?
அ. அப்பர்
ஆ. வாகீசர்
இ. சுந்தரர்
ஈ. சேக்கிழார்
**விடை: இ**

39.சுந்தரர் யாருடன் சேர்ந்து வெள்ளை யானைமீது ஏறி கயிலை சேர்ந்தார்?
அ. சம்பந்தருடன்
ஆ.அப்பருடன்
இ. காரைக்கால் அம்மையாருடன்
ஈ. சேரமான் பெருமாள் நாயனாருடன்
**விடை: ஈ**
40. 'பொன்னார் மேனியனே புலித்தோலை அரைக்கசைத்து என்று பாடியவர் யார்?
அ. சுந்தரர்
ஆ. அப்பர்
இ. மாணிக்கவாசகர்
ஈ. வாகீசர்
**விடை: அ**

41. மாணிக்கவாசகர் யாருடைய அமைச்சரவையில் இருந்தார்?
அ. சேரமன்னன்
ஆ. சோழன்
இ. அரிமர்த்தன பாண்டியன்
ஈ. பல்லவர்
**விடை: இ**

42. எட்டாம் திருமுறையில் உள்ள நூல்கள் யாவை?

அ. திருவாசகம், திருக்கோவை
ஆ. தேவாரம். திருவாசகம்
இ. திருக்கோவை, தேவாரம்
ஈ. திருவாசகம். திருவெம்பாவை
**விடை: அ**

43. திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் யார்?
அ. வீரமாமுனிவர்
ஆ. ஜியு. போப்
இ. பேராசியர்
ஈ. கபில தேவர்
**விடை:ஆ**

44. தம் கல்லறையில் திருவாசகத்தை வைத்து அடக்கம் செய்யுமாறு வேண்டியவர் யார்?
அ. ஜி.யு. போப்
ஆ. நோம் வாஸ்கி
இ. வீரமாமுனிவர்
ஈ. கால்டுவெல்
**விடை: அ**

44. திருப்பாவையின் ஆசிரியர் யார்?
அ. ஆண்டாள்
ஆ. பெரியாழ்வார்
இ. கண்ணன்
ஈ. திருமால்
**விடை: அ**

45. ஆண்டாளின் தந்தை யார்?
அ. திருமால்
ஆ. சிவன்
இ. பெரியாழ்வார்
ஈ. நம்மாழ்வார்
**விடை: இ**

46. ஆண்டாளை எந்த செடியின் கீழ் இருந்து கண்டெடுத்தனர்?

அ. அரளி
ஆ. துளசி
இ. நொச்சி
ஈ. மல்லிகை
**விடை: ஆ**

47. . பெரியாழ்வாரின் கனவில் தோன்றி "ஆண்டாள் சூடிய மாலையே நமக்கு மகிழ்ச்சி தருவது" என்று கூறியவர் யார்?
அ. ஈசன்
ஆ. முருகன்
இ. திருமால்
ஈ. மன்மதன்
**விடை: இ**

48. 'சூடிக் கொடுத்த நாச்சியார்' என்று அழைக்கப்பட்டவர் யார் ?
அ. லட்சுமி
ஆ. பார்வதி
இ. சரஸ்வதி
ஈ. ஆண்டாள்
**விடை: ஈ**

49. 'மானிடவர்க்கு என்று பேச்சுப்படில் வாழ்கில்லேன்' என்று கூறியவர் யார்?
அ. ஆண்டாள்
ஆ. தேவயானை
இ. பார்வதி
ஈ. உமாதேவி
**விடை: அ**

50. திருமால் ஆண்டாளை எந்த ஊருக்கு அழைத்து வரும்படி பெரியாழ்வாரிடம் கட்டளையிட்டார்?
அ. திருச்சி
ஆ. திருவண்ணாமலை
இ. திருவரங்கம்
ஈ. திருப்பதி
**விடை: இ**

51. நாச்சியார் திருமொழியின் ஆசிரியர் யார்?
அ. திருமங்கையாழ்வார்
ஆ. ஆண்டாள்
இ. பெரியாழ்வார்
ஈ. சுரதா
**விடை: ஆ**

52. திருப்பாவையில் எத்தனை பாசுரங்கள் உள்ளன?
அ.30
ஆ.50
இ.20
ஈ.100
**விடை: அ**

53. பறவைகளின் அரசன் யார்?
அ. புறா
ஆ. கருடாழ்வார்
இ. கிளி
ஈ. மயில்
**விடை: ஆ**

54. ‘சகடாசுரன்’ என்ற அசுரனை அழித்தவன் யார்?
அ. இந்திரன்
ஆ. சண்டேசுரன்
இ). கண்ணபிரான்
ஈ. முருகன்
**விடை: இ**

55. திருப்பாற்கடலில் ஆதிசேடன் மீது பள்ளி கொண்டுள்ளவன் யார்?
அ. திருமால்
ஆ. பரந்தாமன்
இ. பரசுராமன்
ஈ. திருமால்
**விடை: அ**

56. குதிரை வடிவாக வந்த கேசி என்ற அசுரனைக் கொன்றவன் யார்?

அ. எமன்
ஆ. இந்திரன்
இ. முருகன்
ஈ. கண்ணபிரான்
**விடை: ஈ**

57. மாமாயன், மாதவன், வைகுந்தன், கேசவன் என்று அழைக்கப்படுபவன் யார்?
அ. திருமால்
ஆ. முருகன்
இ. விநாயகன்
ஈ. சிவன்
**விடை: அ**

58. மாபலி சக்கரவர்த்தியிடம் மூன்றடி நிலம் கேட்டு வாமன உருவில் வந்தவர் யார்?
அ. சிவன்
ஆ. நந்தகோபன்
இ திருமால்
ஈ. இந்திரன்
**விடை: இ**

59. வடமதுரையின் தலைவன் யார்?
அ. கண்ணன்
ஆ. கர்ணன்
இ. காமன்
ஈ. பரசுராமன்
**விடை: அ**

60. கண்ணனின் தாயின் பெயர் என்ன?
அ. தேவந்தி
ஆ. தேவகி
இ. தேவசேனை
ஈ. உமாதேவி
**விடை: ஆ**

61. கண்ணன் யாரின் நச்சுப்பாலை உண்டு அவளையே அழித்தான்?
அ. பூதனை என்னும் அரக்கியை
ஆ. கேசரி
இ. கம்சனை
ஈ. மாயவனை
**விடை: ஈ**

62. திருமாலின் அவதாரமான இராமவதாரத்தில் இராமன் யாரை கொன்றான் என்ற செய்தி திருப்பாவையில் கூறப்பட்டுள்ளது?
அ. கும்பகர்ணன்
ஆ. விபிடணன்
இ. குகன்
ஈ. வாலி
**விடை: அ**

63. பாவை நோன்பு நோற்க ஏற்ற மாதம் எது?
அ. ஆடி
ஆ. மார்கழி
இ. தை
ஈ. ஐப்பசி
**விடை: ஆ**

64. நாலாயிர திவ்யப் பிரபந்தத்தைத் தொகுத்தவர் யார்?
அ. நாதமுனிகள்
ஆ. நம்பியாண்டார் நம்பி
இ. நம்மாழ்வார்
ஈ. பெரியாழ்வார்
**விடை: அ**

65. நாலாயிர திவ்யப் பிரபந்தத்தில் உள்ள நூல்கள் எத்தனை?
அ. 12 பிரபந்தங்கள்
ஆ. 24 பிரபந்தங்கள்
இ. 26 பிரபந்தங்கள்
ஈ. 18 பிரபந்தங்கள்
**விடை: ஆ**

66. திருமாலின் பாஞ்ச சன்னியத்தின் அம்சமாக கருதப்படும் யார்?
அ. பூதத்தாழ்வார்
ஆ. பேயாழ்வார்
இ. பொய்கையாழ்வார்
ஈ. நம்மாழ்வார்
**விடை: இ**

67. 'பூதம்' என்ற சொல்லைத் தன் பாடல்களில் பயன்படுத்திய ஆழ்வார் யார்?
அ. பேயாழ்வார்
ஆ. பூதத்தாழ்வார்
இ. பெரியாழ்வார்
ஈ. திருப்பாணாழ்வார்
**விடை: ஆ**

68. பேயாழ்வார் திருமாலின் எந்த அம்சம்?
அ. நந்தகம்
ஆ. கௌமோதகி
இ. பாஞ்ச சன்னியம்
ஈ. சக்கரம்
**விடை: அ**

69. திருமாலின் சுதர்சன சக்கர அம்சமாகப் பிறந்தவர் யார்?
அ. ஆண்டாள்
ஆ. பேயாழ்வார்
இ. பொய்கையாழ்வார்
ஈ. திருமழிசை ஆழ்வார்
**விடை:ஈ**

70. பெருமாள் கோயிலில் தொண்டு செய்த மூதாட்டியை இளங்குமரியாக மாற்றியவர் யார்?
அ. திருமழிசை ஆழ்வார்
ஆ. திருப்பாணாழ்வார்
இ. நம்மாழ்வார்
ஈ. மதுரகவியாழ்வார்
**விடை: அ**

71. 'திருப்பல்லாண்டு' என்ற நூலை இயற்றியவர் யார்?
அ. ஆண்டாள்
ஆ. பெரியாழ்வார்
இ. நம்மாழ்வார்
ஈ. பொய்கையாழ்வார்
**விடை: ஆ**

72. ஆழ்வார்கள் மொத்தம் எத்தனை பேர்?
அ.2 ஆ. 15 இ. 12 ஈ. 20
**விடை: இ**

73 பூமாதேவியின் அம்சமாகக் கருதப்படுபவர் யார்?
அ. நாதமுனிகள்
ஆ. புனிதவதியார்
இ. ஆண்டாள்
ஈ. திலகவதி
**விடை: இ**

74. ‘குடிக் கொடுத்த சுடர்க்கொடி’ யார்?
அ. ஆண்டாள்
ஆ. காரைக்கால் அம்மையார்
இ. திலகவதியார்
ஈ. புனிதவதியார்
**விடை: அ**

75.. ஆண்டாளின் தந்தை யார்?
அ. பொய்கையாழ்வார்
ஆ. பூதத்தாழ்வார்
இ. பெரியாழ்வார்
ஈ. பேயாழ்வார்
**விடை: இ**

76. ஆண்டாள் பாடிய பாசுரங்கள் யாவை?
அ. திருப்பாவை, நாச்சியார் திருமொழி
ஆ. திருப்பாவை, திருவெம்பாவை
இ. திருவிருத்தம் திருப்பாவை

ஈ. நாச்சியார் திருமொழி, திருவாய் மொழி

**விடை: அ**

77. ஆழ்வார்களில் மிகுதியான பாசுரங்களைப் பாடியவர் யார்?

அ. திருமங்கையாழ்வார்

ஆ. நம்மாழ்வார்

இ. திருப்பாணாழ்வார்

ஈ. நாதமுனிகள்

**விடை: ஆ**

78. திருவரங்கப் பெருமானின் திருக்கோலத்தைப் பாதாதி கேசமாகப் பாடியவர் யார்?

அ. திருப்பாணாழ்வார்

ஆ. நம்மாழ்வார்

இ. திருமங்கையாழ்வார்

ஈ. பெரியாழ்வார்

**விடை: அ**

79. 'சகடம்' என்ற சொல்லின் பொருள் என்ன?

அ. சக்கரம் ஆ. தூக்கம்

இ. ஒளி ஈ. பறவை

**விடை: அ**

80. 'ஆழி' என்ற சொல்லுக்கு பொருள் என்ன?

அ. நிலவு ஆ. கடல் இ. விசும்பு

ஈ. காற்று

**விடை: ஆ**

81. திருவருட்பாவின் ஆசிரியர் யார்?

அ. வள்ளலார்

ஆ. சுந்தரர்

இ. தாயுமானவர்

ஈ. பட்டினத்தார்

**விடை: அ**

82. அருள் சோதி உருக்கொண்டவர் யார் என்று வள்ளலார் கூறுகின்றார்?

அ. முருகன்
ஆ. இந்திரன்
இ. சிவன்
ஈ. நான்முகன்
**விடை: இ**

83. கோடை வெயிலில் வெதும்பியவர்க்கு குளிர்ந்த மரம் போல் இருப்பவர் யார்?
அ. ஈசன்
ஆ. நான்முகன்
இ. இந்திரன்
ஈ. கண்ணன்
**விடை: அ**

84. விளையாடும் பருவத்தே என்னை மணந்து கொண்ட மணவாளன் ஈசன் என்று கூறியவர் யார்?
அ. தாயுமானவர்
ஆ. சம்பந்தர்
இ. சுந்தரர்
ஈ. வள்ளலார்
**விடை: ஈ**

85. அம்பலத்தில் ஆடல் புரிபவன் யார்?
அ. திருமால்
ஆ. நான்முகன்
இ. சிவபெருமான்
ஈ. முருகன்
**விடை: இ**

86. ஒசித்த கொடி என்பதன் பொருள் யாது?
அ. ஒடிந்த கொடி
ஆ. ஆடும் கொடி
இ. கொழு கொம்பின்றி அலைகின்ற கொடி
ஈ. தரையில் படரும் கொடி
**விடை: இ**

87. அன்னப் பறவையை ஊர்தியாகக் கொண்டவர் யார்?
அ. பிரமன்
ஆ. இந்திரன்
இ. திருமால்
ஈ. சிவன்
**விடை: அ**

88.அடிமுடி காண முடியாதவன் யார்?
அ. நான்முகன்
ஆ. ஐயப்பன்
இ. இந்திரன்
ஈ சிவன்
**விடை: அ**

89.'அனம் உகைத்தான்' என்று அழைக்கப்படுபவர் யார்?
அ. சிவன்
ஆ. திருமால்
இ. பிரமன்
ஈ. முருகன்
**விடை: இ**

90. உடம்பில் உருவாகும் நோய்கள் எக்காலத்தில் அதிக வருத்தத்தை தோற்றுவிக்கும்?
அ. இரவு ஆ.காலை
இ. மாலை ஈ.அஅனைத்தும்
**விடை: அ**

91. தோல் சுருங்கிய உடம்பை வள்ளலார் எவ்வாறு கூறுகின்றார்?
அ. வற்றிய உடல்
ஆ. திரைந்த உடல்
இ. முதிர்ந்த உடல்
ஈ. இவற்றில் எதுவுமில்லை
**விடை: ஆ**

92. வேதாகமங்களின் உச்சியில் விளங்கும் இன்பம் நிறைந்த பரம்பொருள் சிவன் என்று கூறியவர் யார்?

அ. தாயுமானவர்
ஆ. சிவப்பிரகாசர்
இ. வள்ளலார்
ஈ. சுந்தரர்
**விடை: இ**

93. யோக நூல் வல்லவர்கள் சொல்லுகின்ற யோகாந்தத்தில் எத்தனை தலங்கள் உள்ளன?
அ. பல கோடி
ஆ. பத்து கோடி
இ. ஒரு கோடி
ஈ. இரண்டு கோடி
**விடை: அ**

94 உலகியல் வாழ்க்கைக்குரிய அறங்களை உரைப்பனவற்றை எவ்வாறு அழைப்பர்?
அ. இல்லாத வேதாந்தம்
ஆ. இலங்குகின்ற வேதாந்தம்
இ. போதாந்தம்
ஈ. நாதாந்தம்
**விடை: அ**

95. திருவருட்பாவில் நமக்குப் பாடமாக அமைந்துள்ள பகுதி எது?
அ. திருவருட்பேறு
ஆ. பரசிவ நிலை
இ. காட்சிக் களிப்பு
ஈ. அருள் விளக்க மாலை
**விடை: ஈ**

96. கவ்வை என்பதன் பொருள் என்ன?
அ. இன்பம்
ஆ.துன்பம்
இ. களிப்பு
ஈ. உதவி
**விடை: ஆ**

97. சித்து என்பதன் பொருள் என்ன?
அ. அறிவு
ஆ. உண்மை
இ.ஞானம்
ஈ உபதேசம்
**விடை: ஆ**

98. மன் என்பதன் பொருள் என்ன?
அ. மண்
ஆ. பெருமை
இ. வலிமை
ஈ. தாழ்மை
**விடை: ஆ**

99. அனாதி என்பதன் பொருள்என்ன?
அ.ஆரம்பம்
ஆ. முடிவு
இ. எல்லை
ஈ. வரவு
**விடை: ஆ**

100. கண்டம் என்பதன் பொருள் என்ன?
அ.ஆகாயம்
ஆ. உலகம்
இ. ஆரம்
ஈ. கழுத்து
**விடை: ஈ**

101. சித்தர்களின் ஆதி சித்தராகக் கருதப்படுபவர் யார்?
அ. கடுவெளிச்சித்தர்
ஆ. பாம்பாட்டிச் சித்தர்
இ. பட்டினத்தார்
ஈ திருமூலர்
**விடை : ஈ**

102. சாமி கும்பிடுவோர் பாடும் பாடல்?

அ. ஒப்பாரிப் பாடல்
ஆ. தொழில் பாடல்
இ. சடங்குப் பாடல்கள்
ஈ. வழிபாட்டுப் பாடல்
**விடை: ஈ**

103. உருவ வழிபாடு செய்யாமல், வெட்டவெளியையே கடவுளாக வழிபட்ட கடுவெளிச்சித்தர் யார்?
அ. சிவவாக்கியர்
ஆ. பாம்பாட்டிச் சித்தர்
இ. பட்டினத்தார்
ஈ. கடுவெளிச்சித்தர்
**விடை: ஈ**

104. "வெள்ளிப்பிடி அருவா ஏ! விடலைப் பிள்ளை கை அருவாசொல்லி யடிச்சருவா இப்போசுழட்டுதடி நெல்சுதிரெ..." என்னும் பாடல் வரிகள் எவ்வகைப் பாடல்களை சார்ந்தது?
அ. ஒப்பாரிப் பாடல்
ஆ. தொழில் பாடல்
இ. சடங்குப் பா பாடல்கள்
ஈ. வழிபாட்டுப் பாடல்
**விடை: ஆ**

105. கடுவெளிச் சித்தர் பாடிய பாடல்களின் எண்ணிக்கை மொத்தம் எத்தனை?
அ. 44
ஆ. 84
இ. 64.
ஈ. 54
**விடை: ஆ**

106. 'சித்தர்கள்' என்ற சொல்லுக்கு பொருள் என்றன?
அ. ஆன்மா
ஆ. நிறைவடைந்தவர்
இ. மெய்யறிதல்
ஈ. சித்து
**விடை: ஆ**

107. பாம்பாட்டிச் சித்தர் பாடிய பாடல்களின் எண்ணிக்கை மொத்தம் எத்தனை?

அ. 6.

ஆ. 12

இ. 13

ஈ.18

**விடை: ஈ**

108. 'சித்தர்' என்ற சொல் எந்த மொழியில் இருந்து உருவானது?

அ. லத்தீன்

ஆ. கிரேக்கம்

இ. பிரெஞ்சு

ஈ. வடமொழி

**விடை: ஈ**

109. சித்தர்களின் தலைவராக போற்றப்படுவர் யார்?

அ. அகத்தியர்

ஆ. திருமூலர்

இ. கடுவெளி சித்தர்

ஈ இடைக்காடர்

**விடை: ஆ**

110. "வெள்ளிப்பிடி அருவா ஏ! விடலைப் பிள்ளை கை அருவா சொல்லி யடிச்சருவா இப்போ சுழட்டுதடி நெல்சுதிரெ..." என்னும் பாடல் வரிகள் எவ்வகைப் பாடல்களை சார்ந்தது?

அ. ஒப்பாரிப் பாடல்

ஆ. தொழில் பாடல்

இ. சடங்குப் பாடல்கள்

ஈ. வழிபாட்டுப் பாடல்

**விடை: ஆ**

111. 'சித்தர்கள்' என்றால் பொருள். என்று

அ. ஆன்மா

ஆ. நிறைவடைந்தவர்

இ. மெய்யறிதல்

ஈ. சித்து

**விடை: ஆ**

112. பாம்பாட்டிச் சித்தர் பாடிய பாடல்களின் எண்ணிக்கை மொத்தம் எத்தனை?

அ. 127

ஆ. 130

இ. 135

ஈ. 129

**விடை: ஈ**

113.'சித்தர்' என்ற சொல் எந்த மொழியில் இருந்து உருவானது?

அ. லத்தீன்

ஆ. கிரேக்கம்

இ. பிரெஞ்சு

ஈ. வடமொழி

**விடை: ஈ**

114. சித்தர்களின் தலைவராக போற்றப்படுவர் யார்?

அ. அகத்தியர்

ஆ. திருமூலர்

இ. கடுவெளி சித்தர்

ஈ. இடைக்காடர்

**விடை: ஈ**

115. அழுகையை சுவையுடன் பாடல் பாடிய சித்தர் யார்?

அ. பாம்பாட்டி சித்தர்

ஆ. பாம்பாட்டிச் சித்தர்

இ. பட்டினத்தார்

ஈ. கடுவெளிச்சித்தர்

**விடை: இ**

116. குதம்பை என்பது ஒருவகை ?

அ. காதணிகள்

ஆ. விலங்குகள்

இ. மலர்கள்

ஈ. தாவரங்கள்

**விடை: அ**

117. ஏட்டில் எழுதாத பாடல் என்று கருதப்படுவது

அ.. நாட்டுப்புற பாடல்கள்

ஆ. வாய்மொழி இலக்கியம்

இ. கும்மி பாடல்கள்

ஈ. கிராமிய பாடல்கள்

**விடை: அ**

118. சாமி கும்பிடுவோர் பாடும் பாடல்

அ. ஒப்பாரிப் பாடல்

ஆ. தொழில் பாடல்

இ. சடங்குப் பாடல்கள்

ஈ. வழிபாட்டுப் பாடல்

**விடை: ஈ**

119. தேயிலைத் தோட்டப்பாட்டு எந்த நூலிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது?

அ. நாட்டுப்புற பாடல்கள்

ஆ. கிராமிய பாடல்கள்

இ. வாய்மொழி இலக்கியம்

ஈ. கும்மி பாடல்கள்

**விடை: ஈ**

120. எந்த சித்தர் பாடிய பாடல்கள் 'ஞானப்பாமாலை' என்று வழங்கப்படுகிறது?

அ. பாம்பாட்டிச் சித்தர்

ஆ. சிவவாக்கியர்

இ. அகத்தியர்

ஈ. கடுவெளிச்சித்தர்

**விடை: இ**

121. சித்தர்களின் எண்ணிக்கையை எத்தனையாக கூறுவது மரபாக இருந்து வருகிறது?

அ. முப்பது

ஆ. இருபது

இ. பதினெட்டு
ஈ. நாற்பது
**விடை: இ**

122. குணங்குடி மஸ்தான் சாகிபு பிறந்த ஊர் எது?
அ. தொண்டி
ஆ. இராமநாபுரம்
இ. முசிறி
ஈ. திருச்சி
**விடை: அ**

123. குணங்குடியாரின் இயற்பெயர் என்ன?
அ. நயினா முகமது
ஆ. பட்டினத்தார்
இ. சுல்தான் அப்துல் காதிறு லெப்பை
ஈ. உமறுப்புலவர்
**விடை: இ**

124. இசுலாமியத் தாயுமானவர் என்று அழைக்கப்படுபவர் யார்?
அ. குணங்குடி மஸ்தான் சாகிபு
ஆ. வள்ளலார்
இ.உமறு புலவர
ஈ.நயினார்
**விடை: அ**

125. குணங்குடி மஸ்தான் சாகிபு மீது நான்மணிமாலை பாடியவர் யார்?
அ. திருத்தணிகை சரவணப்பெருமாள்
ஆ. அய்யாசாமி
இ. பெரியசாமி
ஈ. பட்டினத்தார்
**விடை: அ**

126. அய்யாசாமி முதலியார் குணங்குடியார் மீது பாடிய நூல் எது?
அ. அந்தாதி
ஆ. குணங்குடியார் அந்தாதி
இ. நான்மணிமாலை

ஈ.பதிற்றுப்பத்தந்தாதி

**விடை: ஈ**

127. பராபரன் என்பதன் பொருள் என்ன?

அ. இறைவன்

ஆ. சக்தி

இ. அருள்

ஈ. உலகம்

**விடை: அ**

128. பராபரக் கண்ணியில் மொத்தம் எத்தனை கண்ணிகள் உள்ளன ?

அ. 200

ஆ.300

இ.500

ஈ.100

**விடை:இ**

129. ஞான நெறிகளுள் ஒன்றான நடுவீடு எனப்படுபவது எது?

அ.பிரணவமந்திரம்

ஆ.பிரம்ம மந்திரம்

இ.சிவப்புராணம்

ஈ.அருள்வேட்டல்

**விடை: அ**

130. ‘இஸ்லாமியத் தாயுமானவர்’ என்று அழைக்கப்படுபவர் யார்?

அ. குணங்குடி மஸ்தான் சாகிபு

ஆ. நயினா முகமது

இ. காதிர்லெப்பை

ஈ. சீயமங்கலம் அருணாச்சலம்

**விடை: அ**

131. குணங்குடியாரின் இயற்பெயர் என்ன?

அ. தாயுமானவர்

ஆ. குணங்குடியார்

இ. சுல்தான் அப்துல் காதிர்

ஈ. நயினா முகமது

**விடை:இ**

132. குணங்குடி மஸ்தான் சாகிபுமீது நான்மணி மாலையை பாடியவர் யார்?
அ. அய்யாசாமி முதலியார்
ஆ. திருத்தணிகை சரவணப் பெருமாள் ஐயர்
இ. திருமூலர்
ஈ. அருணாகிரிநாதர்
**விடை:ஆ**

133. குணங்குடி மஸ்தான் சாகிபுமீது பதிற்றுப்பத்தந்தாதி பாடியவர் யார்?
அ. அய்யாசாமி முதலியார்
ஆ. முத்தையா.
இ. பண்டிதர் சம்பந்தஅருணாச்சலம்
ஈ. பிரபு தேவராயன்
**விடை: ஈ**

134. இஸ்லாமிய சித்தர் என்று அழைக்கப்படுபவர் யார்?
அ. மஸ்தான் சாகிபு
ஆ. சரவணப்பெருமாள்
இ. அப்துல் காதிர் லெப்பை
ஈ. கோவளம் சபாபதி
**விடை: அ**

135. ஆலிம் என்பதன் பொருள் யாது?
அ. போதை வெறி
ஆ. அத்தர் வணிகம்
இ. சமயக் கல்வி அறிஞர்
ஈ. வெறிபிடித்த ஞானியர்
**விடை: இ**

136. இரண்டு இரண்டு அடிகளைக் கொண்ட பாடலை எவ்வாறு அழைப்பர்?
அ. பாடல்
ஆ. கீதம்
இ. கண்ணி
ஈ. கன்னி
**விடை: இ**

137. மஸ்தான் என்பதன் பொருள் யாது?
அ. போதை வெறி
ஆ. மத வெறி
இ. சமயக் கல்வி அறிஞர்
ஈ. ஆசிரியர்
**விடை: அ**

138..மஸ்தான் சாகிபு செய்த தொழில் எது?
அ. ஆசிரியர்
ஆ. அத்தர் வணிகம்
இ. சமயக் கல்வி அறிஞர்
ஈ. வேளாண்மை
**விடை: ஆ**

139. சித்தரின் பாடல்கள் எவற்றை உணர்த்துகின்றன?
அ. உலகின் நிலையாமையை உணர்த்துகின்றன
ஆ. இறைவனின் திருக்கூத்தை
இ. இறை தன்மையை மறக்காத நிலையை
ஈ. துறவுநிலையை
**விடை: அ**

140. மஸ்தான்சாகிப்பிடம் தீட்சை பெற்றவர் யார்?
அ. சரவணப்பெருமாள்
ஆ. அப்துல் காதிர் லெப்பை
இ. நயினா முகமது
ஈ. ஆலிம்
**விடை: அ**

141. மஸ்தான் சாகிபின் ஆசிரியர் யார்?
அ. கோவளம் சபாபதி
ஆ. சரவணப்பெருமாள்
இ. அப்துல் காதிர் லெப்பை
ஈ. நயினா முகமது
**விடை: இ**

142. இறைவன் ஆடும் திருக்கூத்து எது?

அ. கும்மிருட்டாகிய சுத்தவெளி
ஆ. படைப்பின் பொருள்
இ. படைப்பின் இரகசியங்கள்
ஈ. இயற்கையின் ரகசியம்
**விடை: இ**

143. படிப்பதால் உணர முடியாதவன் யார்?
அ. இறைவன்
ஆ) ஆசிரியர்
இ) பெற்றோர்
ஈ) சுத்தவெளி
**விடை : அ**

144. குணங்குடி மஸ்தான் சாகிபு பாடல்களை தொகுத்தவர் யார்?
அ) சரவணப் பெருமாள் ஐயர்
ஆ) அய்யா சாமி
இ) சீயமங்கலம் அருணாச்சல முதலியார்
ஈ) நயினா முகமது
**விடை : இ**

145. இரட்சணிய மனோகரம் என்ற நூலின் ஆசிரியர் யார்?
அ. எச்.ஏ.கிருட்டிணப்பிள்ளை
ஆ. ஜி.யு. போப்
இ. வீரமாமுனிவர்
ஈ. திருநாவுக்கரசர்
**விடை : அ**

146. விரும்பிய செயல் சிறப்புடன் முடிய யாரை வணங்க வேண்டும்?
அ. பணக்காரரை
ஆ. உயர்ந்தோரை
இ. தேவர்களை
ஈ. இறைவனை
**விடை : ஈ**

147. நான் பாவ வழியை விட்டு நிலையாக வாழும் நல்ல ஆவியை எனக்கு தந்தருள வேண்டும் என்று கிருட்டிணப்பிள்ளை யாரிடம் முறையிடுகின்றார்?

அ. தேவதூதனிடம்
ஆ. இறைமைந்தனிடம்
இ. அல்லாவிடம்
ஈ. ஈசனிடம்
**விடை : ஆ**

148. இரவில் தனக்கு நல்ல உறக்கத்தை கொடுத்த இயேசுவிற்கு எத்தனை வணக்கம் தருவதாக கிருஷ்ணபிள்ளை கூறுகின்றார்?
அ. பத்தாயிரம்
ஆ. இருபதாயிரம்
இ. ஆயிரம்
ஈ. லட்சம்
**விடை : அ**

149. யாருடன் தான் நட்பு கொள்ளாமல் இருக்க வேண்டும் என இறைவனிடம் வேண்டுகின்றார்?
அ. அரக்கர்களோடு
ஆ. யூதர்களோடு
இ. தீயவர்களோடு
ஈ. ஏழையோடு
**விடை : இ**

150. இறைவனின் எப்பாகம் தனக்கு அடைக்கலமாகும் என்கின்றார் கிருஷ்ணபிள்ளை?
அ. கண்கள்
ஆ. இரு கைகள்
இ. மனம்
ஈ. இரு கால்கள்
**விடை :ஈ**

151. தனக்கு தாயும் தந்தையுமாக இருப்பவன் யார் என்று பிள்ளை கூறுகின்றார்?
அ. இறைவன்
ஆ. முன்னோர்கள்
இ. தேவர்கள்
ஈ. ஆசிரியர்கள்

**விடை : அ**

**152.** எது தன்னை விட்டு நீங்க வேண்டும் என்கின்றார்?

அ. கல்வி

ஆ. பொய், ஏமாற்றுதல்

இ. செல்வம்

ஈ. களவு,சூது

**விடை: ஆ**

153. எதை இறைவனுக்கு ஒப்படைத்து விட்டதாக கிருஷ்ணபிள்ளை கூறுகிறார்?

அ. உடலை

ஆ.அன்பை

இ.பொருளை

ஈ. மனத்தை

**விடை: ஈ**

154. இறைவனின் புகழை கவிதையாகப் பாட எத்தனையாயிரம் கோடி நாவுகள் இருந்தாலும் முடியாது என்கின்றார்?

அ. பத்தாயிரம்

ஆ. ஆறாயிரம்

இ. இரண்டாயிரம்

ஈ) இருபதாயிரம்

**விடை:அ**

155. இறைவன் தன்னை தன் தாயைவிட எத்தனை கோடி மடங்கு அன்புகொண்மரக ஆட்கொண்டார் என்று கிருட்டிணப்பிள்ளை கூறுகின்றார்?

அ. 5 கோடி

ஆ) 10 கோடி

இ 100 கோடி

ஈ. 20 கோடி

**விடை : இ**

156. நான் யாரின் பிடியில் மாட்டிக் கொள்ளாமல் இருக்க வேண்டும் என்று கிருட்டிணப்பிள்ளை ஏசுவிடம் வேண்டுகிறார்?

அ. பிசாசு

ஆ. தேவன்
இ. இறைவன்
ஈ) பஞ்சபூதங்கள்
**விடை : அ**

157. இயேசு யாருக்கு கருணை காட்டிய வள்ளல் என்று கிருட்டிணப்பிள்ளை கூறுகின்றார்?
அ. யூதர்களுக்கு
ஆ. மன்னனுக்கு
இ. திருடனுக்கு
ஈ. மக்களுக்கு
**விடை: இ**

158. விண்ணவருக்கு அரசானவன் யார்?
அ. இயேசு
ஆ. அல்லா
இ. வளன்
ஈ. சூசை
**விடை : அ**

159. இறைவனை ஆலயத்தில் சென்று வணங்கும்போது கண்களின் வழியாக எதைக் காட்ட வேண்டும் என்கின்றார் பிள்ளை?
அ. அன்பு
ஆ. இனிய அருள்
இ.ஆன்மீகம்
ஈ. செல்வம்
**விடை: ஆ**

160. பல யுகங்களுக்கும் எது வாழ வேண்டும் என்கின்றார் கிருட்டிணப்பிள்ளை?
அ. ஆன்மீகம்
ஆ. செல்வம்
இ. திருமறை
ஈ) வேதங்கள்
**விடை: இ**

161. கிருட்டிணப்பிள்ளை பிறந்த ஊர் எது?
அ.இரட்டியாப்பட்டி
ஆ. புதுக்கோட்டை
இ. பாளையங்கோட்டை
ஈ. இராசமாபுரம்
**விடை: அ**

162. கிருட்டிணப்பிள்ளை தந்தையின் பெயர் என்ன?
அ. லட்சுமி நாராயணன்
ஆ. சங்கர நாராயணப்பிள்ளை
இ. சங்கரன்
ஈ. ஆல்பிரட்
**விடை : ஆ**

163. கிருட்டிணப்பிள்ளை எந்த வயதில் கம்பராமாயணத்தை மனப்பாடம் செய்திருந்தார்?
அ.20
ஆ. 10
இ. 15
ஈ. 17
**விடை : இ**

164. பிள்ளையவர்கள் யாரிடம் இலக்கணத்தை முறையாகக் கற்றார்?
அ. மணிவாசகர்
ஆ. திருநாவுக்கரசர்
இ. அழகிய மணவாளன்
ஈ. மாணிக்க வாசகத் தேவர்
**விடை : ஈ**

165. கிருட்டிணப்பிள்ளையின் மனைவி பெயர் என்ன?
அ. தெய்வநாயகி
ஆ. வருதம்மாள்
இ. முத்தம்மாள்
ஈ. தங்கம்மாள்
**விடை: இ**

166. யாரின் அன்பு இவரின் உள்ளத்தைக் கவர்ந்தது?
அ. கால்டுவெல்
ஆ.தாயுமானவர்
இ. வீரமாமுனிவர்
ஈ. கம்பர்
**விடை : அ**

167. கிருட்டிணப்பிள்ளை எந்த வயதில் திருமுழுக்குப் பெற்றார்?
அ.20
ஆ.40
இ.25
ஈ. 30
**விடை: ஈ**

168. பிள்ளை ஆசிரியராக இருந்த பத்திரிக்கையின் பெயர் என்ன?
அ. நற்போதகம்
ஆ. நவஜோதி
இ. நவ இந்தியா
ஈ. தினமணி
**விடை: அ**

169. நீதியரசர் என்று அழைக்கப்படுபவர் யார்?
அ. வேதநாயகம்
ஆ. கால்டுவெல்
இ. வீரமாமுனிவர்
ஈ. சுந்தரம்பிள்ளை
**விடை: அ**

170.'கிறித்தவக் கம்பன்' என்று அழைக்கப்படுபவர் யார்?
அ. ஜி.யு போப்
ஆ. எச்.ஏ.கிருட்டிணப்பிள்ளை
இ. வீரமாமுனிவர்
ஈ. வேதநாயகம்
**விடை : ஆ**

171. கிருட்டிணன் என்று பெற்றோர் இட்ட பெயரை என்னவென்று மாற்றிக்

கொண்பார்?

அ. ஹென்றி ஆல்பிரட் கிருட்டிணப்பிள்ளை

ஆ. எச்.ஏ.கிருஷ்ணன்

இ. தைரியநாதன்

ஈ. ஆல்பிரட் ஜோசப்

**விடை : அ**

## அலகு_ 2
## சிற்றிலக்கியங்கள்

172. முத்தொள்ளாயிரம் எந்த மன்னனை பற்றியது?

அ. பல்லவன்

ஆ. பாண்டியன்

இ.சோழன்

ஈ. சேர சோழ பாண்டியர்

**விடை: ஈ**

173. முத்தொள்ளாயிரம் மொத்தம் எத்தனை பாடல்களை கொண்டுள்ளது?

அ. 2700

ஆ.2500

இ. 1000

ஈ.1200

**விடை: அ**

174. முத்தொள்ளாயிரத்தில் கிடைத்துள்ள பாடல்கள் எத்தனை ?

அ. 150

ஆ. 130

இ. 160

ஈ. 100

**விடை: ஆ**

175. முத்தொள்ளாயிரத்தில் சேரனைப் பற்றிய பாடல்கள் எத்தனை?

அ. 30

ஆ. 23

இ. 18

ஈ. 25

**விடை: ஆ**

176. முத்தொள்ளாயிரத்தில் சோழனைப் பற்றிய பாடல்கள் எத்தனை?

அ. 40

ஆ. 46

இ.35

ஈ. 45

**விடை: ஆ**

**177.** முத்தொள்ளாயிரத்தில் பாண்டியனைப் பற்றிய பாடல்கள் எத்தனை?

அ. 65

ஆ. 38

இ. 61

ஈ. 45

**விடை: இ**

178. தொல்காப்பியர் கூறும் விருந்து என்னும் அமைப்பில் அமைந்துள்ள நூல் எது?

அ. பரணி

ஆ. கலிங்கத்துப்பரணி

இ.முத்தொள்ளாயிரம்

ஈ. உலா

**விடை: இ**

179. **முத்தொள்ளாயிரம் நூலின் ஆசிரியர்** ?

**அ. பரணர்**

**ஆ. கபிலர்**

**இ. திருமூலர்**

**ஈ.தெரிய வில்லை**

**விடை: ஈ**

180. முத்தொள்ளாயிரம் நூலின் அடி வரையறை ?

அ. .4 முதல் 6 அடி

ஆ. 5 முதல் 8அடி

இ. 4முதல்8 அடி

ஈ. 3 முதல் 6 அடி
**விடை: அ**

181. முத்தொள்ளாயிரத்தின் யாப்பமைதி ?
அ. ஆசிரியப்பா
ஆ. கலிப்பா
இ. வெண்பா
ஈ. வஞ்சிப்பா
**விடை: இ**

182.குழைந்த சேறுடைய வயல்களில் சிவந்த ஆம்பல் மலர்கள் மலரவும் அதைக்கண்டு வெள்ளம் தீப்பற்றிக் கொண்டது என்று அஞ்சியவை
அ. விலங்கினங்கள்
ஆ.பறவைக்கூட்டங்கள்
இ. மீன்கள்
ஈ. வண்டுகள்
**விடை: ஆ**

183. சேர மன்னனின் சினமுள்ள கொடிய மத யானையானது எதன் மீது தன் துதிக்கையைப் பகைவரது வெண்கொற்றக் குடை எனக் கருதி நீட்டும்.
அ. சூரியன்
ஆ. முழு நிலவு
இ. விண்மீன்
ஈ. புள்ளினம்
**விடை: ஆ**

184. குமரகுருபரர் இயற்றியது
அ. நந்திக் கலம்பகம்.
ஆ. திருவரங்கக் கலம்பகம்
இ. மதுரைக் கலம்பகம்
ஈ தில்லைக் கலம்பகம்
**விடை: இ**

185. முதல் கலம்பகம் எது?-
அ. நந்திக் கலம்பகம்
ஆ.திருக்காவலூர் கலம்பகம்

இ. திருவரங்கப் கலம்பகம்
ஈ. சைவக் கலம்பகம்
**விடை: அ**

186. நந்திக் கலம்பகம் யார் மீது பாடப் பெற்றது?
அ. சேரன்
ஆ.சோழன்
இ.பாண்டியன்
ஈ. தெள்ளாறெறிந்த நந்திவர்மன் மீது
**விடை: ஈ**

187. நந்திக்கலம்பகம் யார்மீது பாடப்பட்டது?
அ. அரசர்
ஆ. புலவர்
இ. மக்கள்
ஈ. இறைவன்
**விடை: அ**

188. நந்திக் கலம்பகம் கூறும் மன்னர் யார்?
அ. பல்லவன்
ஆ. சேரன்
இ. சோழன்
ஈ. பாண்டியன்
**விடை: அ**

189. நந்திக் கலம்பகத்தின் ஆசிரியர் யார்?
அ. நெடுமாறன்
ஆ. குமரகுருபரர்
இ.தஞ்சைவாணன்
ஈ. ஆசிரியர் தெரியவில்லை
**விடை: ஈ.**

'190. "வானுறு மதியை அடைந்ததுன் வதனம்
மறிகடல் புகுந்த துன் கீர்த்தி
நானும் என் கலியும் எவ்விடம் புகுவேம்
நந்தியே நந்தயா பரனே" - இடம் பெறுவது?

அ. நந்திக்கலம்பகம்
ஆ. சைவக் கலம்பகம்
இ. திருக்கோவலூர் கலம்பகம்
ஈ. திருவரங்கக் கலம்பகம்
**விடை: அ**

191 நந்திகலம்பகத்தில் இடம் பெற்றுள்ள மொத்தப் பாடல்கள் எத்தனை?
அ. 114
ஆ. 100
இ. 120
ஈ. 105
**விடை: அ**

192. நந்திக் கலம்பகத்தில் எத்தனை கலம்பக உறுப்புகள் இடம்பெற்றுள்ளன?
அ. 15
ஆ. 17
இ. 12
ஈ. 18
**விடை: ஆ.**

193. "ஈன்ற வேங்கை இருங்கணிச் சூழ்ச்சியே" இடம் பெற்றுள்ள நூல் எது?
அ. தூது
ஆ. உலா
இ. நந்திக் கலம்பகம்
ஈ. பரணி
**விடை: இ**

194. அங்கத நாட்டை ஆள்பவன் யார்?
அ. சேரன்
ஆ.சோழன்
இ. பாண்டியன்
ஈ.நந்திவர்மன்
**விடை: ஈ**

195. கலம்பகம் என்றால் என்ன?
அ. பாக்களால் ஆனது

ஆ. மலர்களால் தொகுக்கப்படுவது
இ. பலவகை பண்களால்
ஈ. அணிகளால்
**விடை: ஆ**

196. கலம்பகம் எத்தனை உறுப்புகளைக் கொண்டது?
அ. 18 உறுப்புகளைக் கொண்டது
ஆ. 20
இ. 15
ஈ. 25
**விடை: அ**

197. கலம்பகம் பாடப்படுவது?
அ. மோனைதொடை
ஆ. இயைபு
இ. அந்தாதித் தொடையில்
ஈ. எதுகை
**விடை: இ**

198. 'சமூக உல்லாசம்' இடம் பெறும் கலம்பகம்?
அ. திருக்காவலூர் கலம்பகம்
ஆ.திருவரங்க கலம்பகம்
இ. சைவக் கலம்பகம்
ஈ. நந்திக் கலம்பகம்
**விடை: அ**

199. திருக்காவலூர் கலம்பகத்தை எழுதியவர் யார்?
அ. தேசிகர்
ஆ. பச்சைமுத்து புலவர்
இ. வீரமாமுனிவர்
ஈ. நாவலர்
**விடை: இ**

200. தில்லைக் கலம்பகம் மற்றும் மதுரைக் கலம்பகம் யார் மீது பாடப்பட்டது?
அ.மன்னன்

ஆ கடவுள்
இ. மக்கள்
ஈ தேவர்கள்
**விடை: ஆ**

201. ஆளுடைய பிள்ளையார் கலம்பகம் யார் மீது பாடப்பட்டது?
அ .மன்னன்
ஆ. அடியார்
இ. புலவர்
ஈ. இறைவன்
**விடை: ஆ**

202. 'மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ்' எனும் நூலைப் பாடியவர் யார்?
அ. அருணகிரிநாதர்
ஆ. தாயுமானவர்
இ. வள்ளலார்
ஈ. குமரகுருபரர்
**விடை: ஈ**

203. குமரகுருபரர் பாடிய பிள்ளைத் தமிழ் நூல் எது?
அ. மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்
ஆ. குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ்
இ. சேக்கிழார் பிள்ளைத் தமிழ்
ஈ. அடிமதிக்குடி ஐயனார் பிள்ளைத்தமிழ்
**விடை: அ**

204. பிள்ளைத்தமிழின் முதன் மூன்று பருவங்கள்
அ. காப்பு, தால், செங்கீரை
ஆ தால், காப்பு, செங்கீரை
இ. காப்பு, செங்கீரை, தால்
ஈ. தால், செங்கீரை,காப்பு
**விடை: இ**

204. 'குழவி மருங்கினும் கிழவதாகும்' எந்த சிற்றிலக்கியம் தோன்றக் காரணமாயிற்று?
அ. பிள்ளைத்தமிழ்

ஆ. தூது
இ. பரணி
ஈ. பள்ளு
விடை: அ

205. பிள்ளைத்தமிழ் இலக்கியத்திற்குத் தோற்றம் தந்தவர் யார்?
அ.சுந்தரனார்
ஆ. தத்துவராயர்
இ. பெரியாழ்வார்
ஈ. நம்மாழ்வார்
**விடை: இ**

206. காந்தியம்மை பிள்ளைத்தமிழ் பாடியவர் யார்?
அ. அழகிய சொக்கநாதர்
ஆ. சண்முகம்
இ. கவிராயர்
ஈ. தத்துவராயர்
**விடை: அ**

207. பிள்ளைத் தமிழில் பாடுவதற்குக் கடினமான பருவம் எது?
அ. சப்பாணி
ஆ. செங்கீரை
இ. அம்புலி
ஈ.ஊசல்
**விடை: இ**

208. முதல் பிள்ளைத் தமிழ் எது?
அ.சேக்கிழார் பிள்ளைத்தமிழ்
ஆ. மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்
இ. குலோத்துங்க சோழன் பிள்ளைத்தமிழ்
ஈ. காந்தியம்மை பிள்ளைத்தமிழ்
**விடை: இ**

209. சேக்கிழார் பிள்ளைத் தமிழைப் பாடியவர் யார்?
அ. மகாவித்துவான் மீனாட்சி சுந்தரனார்
ஆ. குமரகுருபரர்

இ. கவிராயர்
ஈ. சண்முகம்
**விடை: அ**

210. இயேசு நாதர் பிள்ளைத் தமிழ் என்ற நூலை எழுதியவர் யார்?
அ.சண்முகம்
ஆ. கிருஷ்ணப்பிள்ளை
இ. வீரமாமுனிவர்
ஈ. கவிஞர் குற்றலாம்
**விடை: ஈ**

211. வீரமாமுனிவர் பிள்ளைத் தமிழ் இயற்றியவர் யார்?
அ. பண்ணை சண்முகம்
ஆ. தேசிகர்
இ. கவிராயர்
ஈ சொக்கநாதர்
**விடை: அ**

212. பிள்ளைத் தமிழில் இடம் பெறாத இறைவன் ?
அ. சிவபெருமான்
ஆ. திருமால்
இ. கொற்றவை
ஈ.முருகன்
**விடை: அ**

213. மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழின் ஆசிரியர் யார் ?
அ. குமரகுருபரர்
ஆ. சுந்தரர்
இ. சொக்கநாதர்
ஈ சண்முகம்
**விடை: அ**

214. முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் நூலின் ஆசிரியர் ?
அ. தத்துவராயர்
ஆ. தேவர்

இ. குமரகுருபரர்
ஈ. ஞானப்பிரகாசர்
**விடை: இ**

215. சேக்கிழார் பிள்ளைத்தமிழ் நூலின் ஆசிரியர் ?
அ. தத்துவராயர்
ஆ. மீனாட்சி சுந்தரனார்
இ. குமரகுருபரர்
ஈ. தேவர்
**விடை: ஆ**

216. குமரகுருபரர் எந்த ஊரில் பிறந்தார்?
அ. திருவாரூர்
ஆ. சீர்காழி
இ. வைகுண்டம்
ஈ.திவாரூர்
**விடை: இ**

217. பொதிகை மலையில் தோன்றிய மொழி ?
அ. வடமொழி
ஆ.தமிழ்
இ. சமஸ்கிருதம்
ஈ.கன்னடம்
**விடை: ஆ**

218. தாலாட்டு பருவத்தில் யாருக்கு தாலாட்டு பாடுகிறார்?
அ. உமையாள்
ஆ. அங்கயற்கண்ணி
இ. மன்னன்
ஈ. ஈசன்
**விடை: ஆ**

219. சப்பாணி பருவத்தில் யாரை பாடுகிறார் ?
அ. சிவன்
ஆ. முருகன்
இ. திருமால்

ஈ. உமையாள்

**விடை: ஆ**

220. வருகைப் பருவத்தில் எந்த நிலம் சுட்டப்படுகிறது ?

அ. குறிஞ்சி

ஆ. முல்லை

இ. மருதம்

ஈ. பாலை

**விடை: இ**

221. மீனாட்சியம்மை யின் கையில் பொறிக்கப்பட்டுள்ளது எது ?

அ. பவளம்

ஆ. வைரம்

இ. முத்துக்கள்

ஈ. பொன்

**விடை: இ**

222. காளையை கொடியை உடையவன் ?

அ. முருகன்

ஆ. திருமால்

இ. சிவன்

ஈ.திருமால்

விடை ஈ

223. கூடல் மாநகர் என்று அழைக்கப்படும் ஊர் எது?

அ. மதுரை

ஆ. கடலூர்

இ. திருச்சி

ஈ. திருப்பதி

**விடை :அ**

224. தமிழ்ச் சங்கத்தில் புலவராக வீற்றிருந்த கடவுள் யார்?

அ. சூரியன்

ஆ. இந்திரன்

இ. விஷ்ணு

ஈ. சோமசுந்தரர்

**விடை :ஈ**

225. ‘தமிழரசி’ என்று அழைக்கப்படும் தெய்வம் எது?
அ. லட்சுமி
ஆ. சரஸ்வதி
இ. சமயபுரத்தாள்
ஈ. மீனாட்சியம்மை
**விடை :ஈ**

226. கடலில் எறிவதற்காக ஏட்டுச் சுவடியிலனக் கையில் எடுத்தவர் யார்?
அ. கணபதி
ஆ. பிரம்மன்
இ. முருகன்
ஈ. சிவன்
**விடை : அ**

227. சங்கப் புலவர்களின் எதிரே நின்று பாடல் பொருள் உணர்த்தியவன் யார்?
அ. விநாயகர்
ஆ. பிரம்மா
இ. முருகன்
ஈ. சிவன்
**விடை: இ**

228. உமையம்மையிடம் பால் அருந்தியவர் யார்?
அ. திருஞானசம்பந்தர்
ஆ. சுந்தரர்
இ. திருநாவுக்கரசர்
ஈ. நீலகண்டர்
**விடை : அ**

229. முதலை உண்ட பாலகனை மீண்டும் உயிர் பெற பாடியவர் யார்?
அ. சுந்தரர்
ஆ. சம்பந்தர்
இ. அப்பர்
ஈ. வாகீசர்
**விடை: அ**

230. தாழம்பூவை அணியாது விலக்கியவன் யார்?
அ) ஈசன்
ஆ) இந்திரன்
இ முருகன்
ஈ) சந்திரன்
**விடை : அ**

231. 'திருக்கோவையின் ஆசிரியர் யார்?
அ. சம்பந்தர்
ஆ. மாணிக்கவாசகர்
இ. ஆண்டாள்
ஈ. சுந்தரர்
**விடை: ஆ**
232.'மாமுனி' என்று அழைக்கப்படும் முனிவர்?
அ. அகத்தியர்
ஆ. சட்டைமுனி
இ. கும்ப முனி
ஈ. முருகன்
**விடை : அ**

233. சிவஞான போதத்தின் ஆசிரியர் யார்?
அ. மாணிக்கவாசகர்
ஆ. பவணந்தி முனிவர்
இ. மெய்கண்ட தேவர்
ஈ.அகத்தியர்
**விடை : இ**

234. திருவிசைப்பாவின் ஆசிரியர் யார்?
அ. திருமாளிகைத் தேவர்
ஆ. கண்டராதித்தர்
இ. திருமூலர்
ஈ. ஞானசம்பந்தர்
**விடை: அ**

235.செம்மையான சொல்லாற்றல் கொண்டவர் யார்?
அ. கபிலர்

ஆ. நக்கீரர்
இ. காடவர்கோன்
ஈ. சேரமான்பெருமாள் நாயனார்
**விடை: ஈ**

236. தெய்வப் புலவர் யார்?
அ. அகத்தியர்
ஆ. நக்கீரர்
இ. திருவள்ளுவர்
ஈ. திருமூலர்
**விடை : இ**

237. தமிழ் எத்தனை குலங்களாக வந்திருப்பதாக ஆசிரியர் கூறுகின்றார்?
அ. 3
ஆ. 5
இ. 10
ஈ. 7
**விடை : ஆ**

238. முதல் எழுத்துக்கள் எத்தனை?
அ. 30
ஆ. 12
இ.216
ஈ.247
**விடை: அ**

239. 'மஞ்சர்' என்பதன் பொருள் யாது?
அ. சகோதரன்
ஆ. மைந்தர்
இ.தந்தை
ஈ. நண்பர்
**விடை: ஆ**

240. பிள்ளைத்தமிழில் உள்ள பருவங்கள் எத்தனை?
அ. 7
ஆ. 10

இ. 5

ஈ. 2

**விடை: ஆ**

241. யாப்பின் உறுப்புகள் எத்தனை?

அ. 8

ஆ. 6

இ.10

ஈ. 4

**விடை : அ**

242. அணிகளின் வகைகள் எத்தனை?

அ. 35

ஆ.20

இ. 65

ஈ.32

**விடை : அ**

243. தூது எத்தனை வகைப்படும்?

அ. 4

ஆ. 6

இ. 2

ஈ. 5

**விடை: இ**

**244.** கோப்பெருஞ்சோழனிடம் பிசிராந்தையார் எதைத் தூதாக அனுப்புகிறார்?

அ. மயில்

ஆ. அன்னச்சேவல்

இ.கிளி

ஈ. கழுகு

**விடை: ஆ**

246. குணமாலை சீவகனுக்கு அனுப்பிய தூது எது?

அ. கிளி

ஆ. அன்னம்

இ. மயில்

ஈ. நாரை
**விடை: அ**

247. தமயந்தி நளனுக்கு அனுப்பிய தூது எது?
அ.கிளி
ஆ.மயில்
இ. அன்னம்
தமிழ்
**விடை: இ**

248. சுந்தரர் பரவையாருக்கு விடும் தூது எது?
அ. இறைவன்
ஆ. சங்கு
இ. மணி
ஈ. தீபம்
**விடை: அ**

249. தூது எந்த பா வகையில் அமைந்துள்ளது?
அ. வெண்பா
ஆ. வஞ்சிப்பா
இ.ஆசிரியம்
ஈ. கலிவெண்பா
**விடை: ஈ**

250. முதல் தூது இலக்கியம் எது?
அ. நெஞ்சு விடு தூது
ஆ. கிளிவிடுதூது
இ. தமிழ் விடு தூது
ஈ. விறலிவிடு தூது
**விடை: அ**

251.மனிதக் காதலைப் பாடும் தூது நூல்களில் சிறந்தது. எது?
அ. தமிழ்
ஆ.விறலி
இ.கிளி
ஈ. மயில்

**விடை: ஆ**

252. தூது நூல்களில் சிறந்தது எது?
அ. தமிழ்விடுதூது
ஆ. நெஞ்சு
இ. விறலி
ஈ. மயில்
**விடை: அ**

253. பரணி என்பது எது?
அ. நட்சத்திரத்திரம்
ஆ. மணி
இ. மாலை
ஈ. பவனி
**விடை: அ**

254. 'ஆனை ஆயிரம் அமரிடம் வென்ற மானவனுக்கு வகுப்பது பரணி' - இடம் பெறுவது எதில்?-
அ. நன்னூல்
ஆ. நேமிநாதம்
இ. புறப்பொருள் வெண்பாமாலை
ஈ. இலக்கண விளக்கப் பாட்டியல்
**விடை: ஈ**

255. தமிழில் தோன்றிய முதல் பரணி எது?
அ.கலிங்கத்துப்பரணி
ஆ. தக்கயாகபரணி
இ. ஞானப் பரணி
சீனத்து பரணி
**விடை: அ**

256. தாழிசைகள் கொண்ட பரணி ?
அ. கலிங்கத்துப் பரணி
ஆ. தக்கயாகபரணி
இ. ஞானப்பரணி
ஈ. சீனத்து பரணி

**விடை: அ**

257. கலிங்கத்துப் பரணியைப் பாடியவர் யார்?
அ. ஜெயங்கொண்டார்
ஆ. ஒட்டக்கூத்தர்
இ. தேவர்
ஈ. தத்துவராயர்
**விடை: அ**

258. வெற்றியால் பெயர் பெற்ற பரணி எது?
அ. கலிங்கத்துப்பரணி
ஆ. தக்கயாகபரணி
இ. ஞானப்பரணி
ஈ. சீனத்துப் பரணி
**விடை: ஈ**

259. ஒரே இரவில் பாடப்பெற்ற பரணி எது ?
அ. தக்கயாகப் பரணி
ஆ. ஞானப்பரணி
இ. சீனத்து பரணி
ஈ. கலிங்கத்துப்பரணி
**விடை: அ**

260. தக்கயாகப் பரணியை எழுதியவர் யார்?
அ. படிக்காசு புலவர்
ஆ. தேவர்
இ. சுந்தரனார்
ஈ. ஒட்டக் கூத்தர்
**விடை:ஈ**

261. தக்கயாகப் பரணியில் யாருடைய வெற்றி பாடப் படுகிறது?
அ. வீரப்பத்திரன்
ஆ. பல்லவன்
இ. பாண்டியன்
இ. தருமன்
**விடை: அ**

262. பரணி இலக்கியம் எந்தப் பாவில் அமைகிறது?

அ. வெண்பா

ஆ. கலிப்பா

இ. வஞ்சிப்பா

ஈ. கலித்தாழிசை

**விடை: ஈ**

263. தாழிசைகள் கொண்ட பரணி எது?

அ. கலிங்கத்துப்பரணி

ஆ.தக்கயாகப் பரணி

இ. ஞானப் பரணி

ஈ. சீனத்து பரணி

**விடை: ஆ**

264. காளி யாரை கூழடுமாறு மொழிந்தது?

அ. தேவர்கள்

ஆ. வீரர்களை

இ. பேய்களை

ஈ. பெண்களை

**விடை: இ**

265. நிணம் என்ற சொல்லின் பொருள்?

அ. இரத்தம்

ஆ. கொழுப்பு

இ. எலும்பு

ஈ. குடல்

**விடை: ஆ**

266. பேய்களின் வயிறு எவ்வாறு இருந்தது ?

அ. பானை

ஆ. அகலமாக

இ. சிறியதாக

ஈ. நெற்குதிர்

**விடை: ஈ**

267. பேய்கள் எதில் பல் துலக்கின?

அ. மரம்
ஆ. கொடி
இ. எலும்பு
ஈ. யானையின் தந்தம்
**விடை: ஈ**

268. பேய்கள் எங்கு நீராடின ?
அ. குளம்
ஆ. ஏரி
இ. இரத்த ஆறு
ஈ. ஓடை
**விடை: இ**

269. 'பெத்லகேம் குறவஞ்சி' பாடியவர் ?
அ. வேதநாயகம் பிள்ளை
ஆ. கிருஷ்ணப் பிள்ளை
இ. வேதநாயக சாஸ்திரி
ஈ. வீரமா முனிவர்
**விடை: அ**

270. திரிகூடராசப்பக்கவிராயர் எழுதிய நூல் எது?
அ. மீனாட்சிக்குறம்
ஆ. சரதபேந்தர் பூபாலக்குறவஞ்சி
இ. குற்றாலக்குறவஞ்சி
ஈ. பெத்தலேகம் குறவஞ்சி
**விடை: இ**

271. கவன சித்தர் விளைவிப்பது எது?
அ. தினை
ஆ. தேன்
இ. மாங்கனி
ஈ. காயசித்தி
**விடை: ஈ**

272. கானவர்களால் அழைக்கப்படுவோர்
அ. அலங்காரர்

ஆ. வானவர்
இ. கவனசித்தர்
ஈ. பெண்கள்
**விடை: ஆ**

273. கிள்ளி எடுப்பது
அ. கிழங்கு
ஆ. காய்
இ. கனி
ஈ. மலர்
**விடை: அ**

274. கொல்லிமலை என்பதில் இடம்பெறும் புணர்ச்சி வகை
அ. குன்றல்
ஆ. மிகுதல்
இ. மெய்பிறிதாதல்
ஈ. இயல்பு
**விடை: ஈ**

275. கொண்டல் என்பது
அ. மேற்றிசைக் காற்று
ஆ. தென்திசைக் காற்று
இ. வடதிசைக் காற்று
ஈ. கீழ்த்திசைக் காற்று
**விடை: ஈ**

276. இறப்பு நிகழ்வு எதிர்வு என்னும் முக்காலமும்
திறம்பட உரைப்பது குறத்திப்பாட்டே" என வரும் நூல்
அ. பன்னிரு பாட்டியல்
ஆ. நன்னூல்
இ. தொல்காப்பியம்
ஈ. நேமிநாதம்
**விடை: அ**

277. குறவஞ்சி நூல்களுள் சிறப்புமிக்கது எது?
அ. குற்றாலக்குறவஞ்சி

ஆ. குறம்
இ. சரபேந்திரகுறவஞ்சி
ஈ. பூபாலக்குறவஞ்சி
**விடை: அ**

278. குற்றாலக் குறவஞ்சியை இயற்றியவர் எது?
அ. கம்பர்
ஆ. பரணர்
இ. புகழேந்தி
ஈ. திரிகூடராசக்கவிராயர்
**விடை: ஈ**

279. திரிகூடராசப்பக் கவிராயர் பரிசாகப் பெற்ற இடம்
அ. குறவஞ்சிமேடு
ஆ. பீளமேடு
இ. மேடு
ஈ. ஊர்
**விடை: அ**

280. குறவஞ்சி இலக்கியத்தின் வேறு பெயர் குறவஞ்சி ?
அ. உலா
ஆ. நாடகம்
இ. தூது
ஈ. கதை
**விடை: ஆ**

281. சிவபெருமான் குற்றாலத்தில் வீற்றிருக்கும் மரம் எது?
அ. வன்னி
ஆ. குறும்பலா
இ. கொன்றை
ஈ. மகிழம்
**விடை: ஆ**

282. குற்றாலக் குறவஞ்சியின் பாட்டுடைத் தலைவன் யார்?
அ. குற்றாலநாதர்
ஆ. சிவன்

இ. முருகன்

ஈ கணபதி

**விடை: அ**

283. குறவஞ்சி என்பது எவ்வகை இலக்கியம்?

அ. காப்பிய இலக்கியம்

ஆ. பக்தி இலக்கியம்

இ. சிற்றிலக்கியம்

ஈ. நீதி இலக்கியம்

**விடை: இ**

284. திரிகூடராசப்பக் கவிராயர் பிறந்த ஊர் எது?

அ. திருநெல்வேலி

ஆ. மேலகரம்

இ. குற்றாலம்

ஈ. திரிகூடம்

**விடை: ஆ**

285. கவிராயர் குற்றால ஈசன் மீது எத்தனை நூல்கள் பாடியுள்ளார்?

அ. 15

ஆ.16

இ.20

ஈ. 14

**விடை:ஈ**

286. திரிகூடராசப்பருக்குத் திருக்குற்றாலநாதர் கோயில் வித்துவான் என்ற சிறப்பு பட்டப்பெயர் சூட்டிப் பாராட்டினவர் யார்?

அ. முத்துவிசயரங்க சொக்கநாத நாயக்கர்

ஆ. நல்லப்ப நாயக்கர்

இ. தொட்டிய நாயக்கர்

ஈ. முத்துரங்க நாயக்கர்

**விடை :அ**

287. யார் சிந்துகின்ற பழங்களுக்கு வானுலகில் வாழும் தேவர்கள் இரந்துண் கேட்பார்கள்?

அ. குரங்குகள்

ஆ. பறவைகள்
இ. மனிதர்கள்
ஈ விலங்குகள்
**விடை: அ**

288. வன வேடர்கள் தம் கண்களால் ஏறெடுத்துப் பார்த்து உற்றுநோக்கி யாவு அழைப்பார்கள்?
அ. குறத்திகளை
ஆ. தேவர்களை
இ. பறவைகளை
ஈ. ஈசனை
**விடை: ஆ**

289. வானின் வழியாகச் செல்கின்ற சித்தர்கள் கீழிறங்கி வந்து எதை வளர்த்தார்கள்)
அ. மூலிகைகள்
ஆ. அறிவு
இ. செல்வம்
ஈ. ஞானம்
**விடை : அ**

290. வளைந்த இளம்பறையை சூடியிருப்பவன் யார்?
அ. முருகன்
ஆ. இந்திரன்
இ. ஈசன்
ஈ. குருபகவான்
**விடை:இ**

291. குறப்பெண்கள் தினையை இழக்க உலக்கையாகப் பயன்படுத்திய ஆயுதம் எது?
அ. தந்தம்
ஆ. மூங்கில்
இ. கருங்காலி
ஈ. பலாமரத்தின் குச்சி
**விடை அ**

292. அருவி விழும்போது முத்துக்கள் சிதறும் காட்சியானது எது விளையாடுவது போல் உள்ளது?

அ. கில்லி

ஆ. கழங்கு

இ. அம்மானை

ஈ. ஊசல்

**விடை: ஆ**

293. யானைகள் முழுநிலவை என்னவென்று நினைத்து அதனைப் போகவிட தடுத்தது?

அ. சோற்று உருண்டை

ஆ. தேனடை

இ. கரும்பு

ஈ.பழம்

**விடை : அ**

294. சிவ சைல மலை எந்தப் பக்கம் உள்ளதாக குறத்தி கூறுகின்றாள்?

அ. கிழக்கு

ஆ. வடக்கு

இ. மேற்கு

ஈ. தெற்கு

**விடை:ஈ**

295. காகம் பறக்காத மலை எது?

அ. பழனிமலை

ஆ. அய்யர் மலை

இ. கொல்லி மலை

ஈ. திருவண்ணாமலை

**விடை: ஆ**

296. 'பொன்மலை' என்று அழைக்கப்படும் மலை எது?

அ. மேரு மலை

ஆ. பழனி மலை

இ. அய்யர் மலை

ஈ. சிவன் மலை

**விடை: அ**

297. குமரக்கடவுளுக்கு உரிய மலை எது?
அ. பழனிமலை
ஆ. தல மலை
இ நைனாமலை
ஈ. சிவமலை
**விடை : அ**

298. 'சுவாமிமலை 'யாருக்குரிய மலை' என்று குறத்தி கூறுகின்றார்?
அ. முருகன்
ஆ. தந்தை
இ. மாமிக்கு
ஈ. தோழிக்கு
**விடை: இ**

299. மயிலினங்கள் ஆடும் மலை எது?
அ. மயிலாடுதுறை
ஆ. திரிகூடம்
இ. இமயமலை
ஈ. கொல்லிமலை
**விடை : ஆ**

300. ஒருவரிடத்தில் நட்பு கொண்டால் இடையில் அந்நட்பை விட்டுவிடாமல் இறுதிவரை நட்பாக இருப்பவர்கள் யார்?
அ. குறவர் இனம்
ஆ. தமிழர்
இ. மலையாளர்
ஈ. தெலுங்கர்
**விடை :அ.**

301. குறப்பெண்களுக்கு வேங்கை மரமாக நின்று பாதுகாப்பு கொடுத்தது யார்?
அ. சிவன்
ஆ. முருகன்
இ. இந்திரன்
ஈ. சந்திரன்
**விடை : ஆ**

302. எந்த ஊரில் இருக்கும் முருகனுக்கு வள்ளியைத் திருமணம் செய்து கொடுத்தனர்?

அ. திரிகூடமலை

ஆ. சுவாமிமலை

இ. பழனிமலை

ஈ.ன இலஞ்சி

**விடை :ஈ**

303 சூரியனும் சந்திரனும் உலாவும் மலை எது என்று குறத்தி கூறுகின்றாள்?

அ. மேருமலை

ஆ. கொல்லிமலை

இ. இமயமலை

ஈ. சிறுமலை

**விடை: அ**

304. குறவர்கள் மேரு மலையை யாருக்கு சீதனமாகக் கொடுத்தனர்?

அ. முருகன்

ஆ. துருவன்

இ. சிவன்

ஈ. இந்திரன்

**விடை : ஆ**

305. இளையாளாகிய செப்பிக்கு உரிய மலை எது?

அ. பச்சைமலை

ஆ. பழனிமலை

இ. இமயமலை

ஈ. கொல்லி மலை

**விடை: ஈ**

306. இமயமலை யாருக்குரிய மலை என்று குறத்தி கூறுகின்றாள்?

அ. தந்தை

ஆ.) கணவன்

இ. தமையன்

ஈ. தங்கை

**விடை: ஆ**

307. குறவஞ்சி நாட்டியம் என்று அழைக்கும் நூல் எது?
அ. குறத்திப்பாட்டு
ஆ. குளுவ நாடகம்
இ. குறவஞ்சி
ஈ. குற்றாலக்குறவஞ்சி
**விடை: ஈ**

308. குறவஞ்சி எவ்வகை இலக்கணம்?
அ. நாடக வகை
ஆ. காப்பிய வகை
இ. கூத்து வகை
ஈ. கவிதை வகை
**விடை: அ**

309. கட்டுவிச்சி, அகவமகள் என்போர் யார்?
அ. தலைவி
ஆ. வைத்தியர்
இ. விறலியர்
ஈ. குறிசொல்பவர் .
**விடை: ஈ**

310. முதல் குறவஞ்சி இலக்கியம் எது?
அ. குற்றாலக் குறவஞ்சி
ஆ.சரபேந்திர குறவஞ்சி
இ.பெத்லகேம் குறவஞ்சி
ஈ. திருவாரூர் குறவஞ்சி
**விடை: அ**

## அலகு_ 3
## சிறுகதைத் தொகுப்பு

311. காலனும் கிழவியும் சிறுகதையின் ஆசிரியர் யார்?
அ. கு.அழகிரிசாமி
ஆ. புதுமைப்பித்தன்
இ. ஜெயகாந்தன்
ஈ. மௌனி

**விடை: ஆ**

312. உயிரைக் கவர வந்த யமனையும் தம் பேச்சுத்திறமையால் வென்றவள் யார்?

அ. கிழவி. .

ஆ. மாடசாமி

இ. சித்திரபுத்தன்

ஈ. சுப்புநாடன்

**விடை: அ**

313. மருதாயின் பேரன் யார்?

அ. முனுசாமி

ஆ. கந்தன்

இ. கருப்பு சாமி

ஈ. மாடசாமி

**விடை: ஈ**

314. வெள்ளை கோயில் என்பது என்ன?

அ. கோயில்

ஆ. தோட்டம்

இ. சுடுகாடு

ஈ. இடுகாடு

**விடை: இ**

315. கிழவி எதை வைத்து மாடசாமிக்கு எமன் வந்ததாக கூறினாள்?

அ. கயிறு

ஆ. துண்டு

இ. கோணிப்பை

ஈ. விறகு

**விடை: அ**

316. நட்சத்திரக் குழந்தைகள் சிறுகதையின் ஆசிரியர் யார்?

அ. புதுமைப்பித்தன்

ஆ. ஜெயகாந்தன்

இ. பி.எஸ் ராமையா

ஈ. அகிலன்

**விடை: இ**

317. நட்சத்திரங்களுக்கு அப்பா என்று யாரைக் கூறினார் ரோஹினியின் அப்பா?

அ. சூரியன்

ஆ. சந்திரன்

இ. சுவாமி

ஈ. மேகம்

**விடை: இ**

318. குழந்தை ரோஹிணியின் தந்தை யார்?

அ. ஸ்ரீமான் சோமசுந்தரம்.

ஆ. கோபாலன்

இ. நரசிம்மர்

ஈ. பூபாலன்

**விடை: அ**

319. "கணந்தோறும் நவநவமாம் களிப்பைத் தரும் மாலைப் பொழுது யாருக்கு மகிழ்வைத் தந்தது.

அ. ராகிணி

ஆ. ரோகிணி

இ. ஸ்டெல்லா

ஈ. மகிலா

**விடை: ஆ**

320. எப்போது நட்சத்திரம் பிறக்கிறது?

அ. பொய் சொல்லும்போது

ஆ. உண்மை பேசும்போது

இ. சிரிக்கும் போது

ஈ. அழும்போது

**விடை: ஆ**

321. விடியுமா? சிறுகதையின் ஆசிரியர் யார்?

அ. ஜெயகாந்தன்

ஆ. புதுமைப்பித்தன்

இ. அகிலன்

ஈ. கு.ப.ரா

**விடை: ஈ**

322. கு.ப.ரா எந்த பத்திரிக்கையின் ஆசிரியராக பணி யாற்றினார்.?

அ. பாரதம்

ஆ.இந்தியா

இ. கிராம ஊழியன்

ஈ. கல்கி

**விடை: இ**

323. விடியுமா சிறுகதையில் தந்தியில் இருந்த செய்தி என்ன?

அ. சிவராமையர் - டேஞ்சரஸ்

ஆ. சிவராமையர்

இ. சிவராமையர் மேனஜர்

ஈ. சிவராமையர் ஜெனரல்

**விடை: அ**

324. தந்தி எங்கிருந்து வந்திருந்தது?

அ. மதுரை

ஆ.சென்னை

இ. வேலூர்

ஈ.சூலூர்

**விடை: ஆ**

325. அம்மா வாசலில் போய் நின்று பார்த்த சகுனம் என்ன?

அ. குடத்தில் நீர் எடுத்துக் கொண்டு வருதல்

ஆ. பூனை குறுக்கே செல்லுதல்

இ.கழுதை கத்துதல்

ஈ. நாய் ஓலமிடல்

**விடை: அ**

326 குஞ்சம்மாளுக்கு என்ன மிகவும் பிடிக்கும்?

அ. பூக்கள்

ஆ. பூனைகள்

இ.நாய்கள்

ஈ. உடைகள்

**விடை: அ**

327. குடத்தில் தண்ணீர் கொண்டு வந்த பெண் யார்?
அ. தேவகி
ஆ. சுமதி
இ. சுந்தரி
ஈ.மாலா
**விடை: இ**

238. குஞ்சம்மாள் எதில் பயணம் செய்தாள்?
அ. பேருந்து
ஆ. விமானம்
இ. ரயில்
ஈ. ஆட்டோ
**விடை: இ**

329. 'பெரிய நாயகி உலா' சிறுகதையின் ஆசிரியர் யார்?
அ. அகிலன்
ஆ. புதுமைப்பித்தன்
இ. ந.. பிச்சமூர்த்தி
ஈ. பார்த்திபன்
**விடை: இ**

330. பெரிய நாயகியின் வாயிற்காப்பாளர்கள் யார்?
அ. அம்பை
ஆ. நளதன்
இ. விதுரன்
ஈ. ஜயையும், விஜயையும்.
**விடை: ஈ**

331. வாயிற்காப்பாளர் கையில் வைத்திருந்தது எது?
அ. ஈட்டி
ஆ. வில்
இ. உருவிய கத்தி
ஈ. அம்பு
**விடை: இ**

332. 'பெரியநாயகி உலா' சிறுகதையில் வரும் சந்நிதித் தெருவில் யாருடைய வீடுகள் அதிகம் இருந்தன?

அ. மேல் வர்க்கத்தினர்

ஆ. பணக்காரர்கள்

இ. வக்கீல் வீடுகள்

ஈ. உழவர்கள்

**விடை : இ**

333. பெரியநாயகி தாங்கள் சிருஷ்டி செய்யாத பொருள்கள் எவை எனக் கூறினாள்?

அ. சொத்து, பணம்

ஆ. பணம் பொன்

இ. பொன் பொருள்

ஈ. சொத்து பொன்

**விடை: அ**

334. சினிமாக்காரர்களிடம் பெரியநாயகியின் ஊராகவும், பெயராகவும் விஜயை கூறியது யாது?

அ. மெய்யூர், மாயாதேவி.

ஆ. பொய்யூர் ரமாதேவி

இ. செய்யூர் சீதாதேவி

ஈ. பேரூர் முனிதேவி

**விடை: அ**

335. "அன்பளிப்பு" சிறுகதையின் ஆசிரியர் யார்?

அ. அகிலன்

ஆ. அண்ணா

இ. வவாஸந்தி

ஈ. கு. அழகிரிசாமி

**விடை: ஈ**

336. குழந்தைகள் மாமாவை எழுப்பிக் கேட்டது என்ன?

அ. பேனா

ஆ. நோட்டு

இ. புத்தகம்

ஈ. பொம்மை

**விடை: இ**

337. குழந்தைகளில் குறும்பு பண்ணாமல் இருப்பவன் யார்?

அ. சித்ரா

ஆ. சாரங்கன்

இ. கீதா

ஈ. தேவகி

**விடை: ஆ**

338. மாமா தான் கொண்டு வந்த புத்தகங்களை யார், யாருக்கு அன்பளிப்பாகத் தந்தார்?

அ. கீதா தேவகி

ஆ. தேவகி சித்ரா

இ. சித்ரா கீதா

**ஈ.** சித்ரா, சுந்தர்ராஜன் .

**விடை: ஈ**

339. சாரங்கன், மாமாவிடம் தனக்கு வேண்டும் என்று கேட்ட புத்தகம் எது?

அ. பாரதியார் கவிதைகள்

ஆ. ஷெல்லி கவிதைகள்

இ. வால்ட் விட்மன் கவிதைகள்

ஈ. கதைகள்

**விடை: இ**

340 கு. அழகிரிசாமி யாரை, பார்ப்பதற்காக அவர்கள் இல்லத்திற்குச் சென்றதாகக் குறிப்பிடுகின்றார்?

அ. கீதா

ஆ. தேவகி

இ. சித்ரா

ஈ. பிருந்தா

**விடை: ஈ**

341. பிருந்தா வீட்டிற்குப் போனதால் அவரைக் கட்டாயப்படுத்தித்
தன் வீட்டிற்கும் வருமாறு அழைத்தது யார்?

அ. சாரங்கராஜன்.

ஆ. சுந்தரராஜன்
இ. கீதா
ஈ. தேவகி
**விடை: அ**

342. 'நந்தவனத்தில் ஓர் ஆண்டி' சிறுகதையின் ஆசிரியர் யார்?
அ. ஜெயகாந்தன்.
ஆ. புதுமைப்பித்தன்
இ. சாண்டில்யன்
ஈ. கு.ப.ரா
**விடை: அ**

343. ஆண்டியின் மனைவி பெயர் என்ன?
அ. முருகாயி,
ஆ. இருளாயி
இ. சாந்தம்மா
ஈ. குருவம்மா
**விடை: அ**

344. ஆண்டியின் மகன் பெயர் என்ன?
அ. சாதுவன்
ஆ. சிவா
இ. இருளன்
ஈ. சுயம்பு
**விடை: இ**

345. நாற்காலி சிறுகதையின் ஆசிரியர் யார்?
அ. கி.ராஜநாராயணன்.
ஆ. வாஸந்தி
இ. மௌனி
ஈ. அகிலன்
**விடை: அ**

346. மாமனார் வீட்டிற்கு வந்தால் எங்கே உட்காருவார்?
அ. நாற்காலி
ஆ. முக்காலி

இ. தூணில்
ஈ. பாயில்
**விடை: இ**

347. தாய்மாமனாருக்கு அம்மா என்ன கொடுத்து உபசரித்ததாக கி. ராஜ நாராயணன் கூறுகின்றார்?
அ. காபி
ஆ. பழச்சாறு
இ. மோர்
ஈ. தின்பண்டங்கள்
**விடை: இ**

348.தாய்மாமா தன் தங்கைக்காக எதைக் கொண்டு வந்து கொடுத்தார்?
அ. தோட்டம்
ஆ. பசு
இ. நகை
ஈ. மோட்டார்
**விடை: ஆ**

349. மாமா நாற்காலியை எந்த மரத்தில் செய்யலாம் என்று கூறினார்?
அ. தேக்கு
ஆ. வேம்பு
இ. பூவரசம்
ஈ. சவுக்கு
**விடை: ஆ**

350. பிரும்மம் சிறுகதையின் ஆசிரியர் யார்?
அ. பிரபஞ்சன்
ஆ. ஜெயகாந்தன்
இ. சுஜாதா
ஈ. சிவசங்கர்
**விடை: அ**

351. அப்பா, காலியாகக் கிடக்கும் நிலத்தில் என்ன நடலாம் என்று கூறினாள்?
அ. துவரை
ஆ. வாழை

இ.முருங்கை
ஈ. கீரை
**விடை: இ**

352. வாத்தியார், முருங்கை மரத்தை என்ன என்று கூறினார்?
அ. பிரம்ப விருட்சம்
ஆ. கற்பக விருட்சம்
இ. மரம்
ஈ. விருட்சம்
**விடை: அ**

353. ‘வாகனம்’ சிறுகதையின் ஆசிரியர் யார்?
அ. அம்பை.
ஆ. கு.ப.ரா
இ. லஷ்மி
ஈ. ஆனந்தி
**விடை: அ**

354. பாக்கியத்தின் அம்மா காலத்திலேயே பெண்கள் எதில் பங்கெடுத்துக் கொண்டனர்?
அ. சைக்கிள் பந்தயம்
ஆ. குதிரை பந்தயம்
இ. ஓட்ட பந்தயம்
ஈ. விளையாட்டு
**விடை: அ**

355. ராலே சைக்கிளை ஓட்டப் பழகியவர் யார்?
அ. அண்ணி
ஆ. அண்ணா
இ. கமலா சித்தி
ஈ. அம்மா
**விடை: இ**

356. கிண்டி அருகில் வந்தபோது எதைப் பழக ஆசைப்பட்டதாக பாக்கியம் கூறுகிறாள்?
அ. குதிரைச்சவாரி

ஆ. தையல்
இ. சமையல்
ஈ. கைத்தொழில்
**விடை: அ**

357. 'யானை டாக்டர்' சிறுகதையின் ஆசிரியர் யார்?
அ. அகிலன்
ஆ. பார்த்தசாரதி
இ. அம்பை
ஈ.ஜெய மோகன்
**விடை: ஈ**

358. யானைக்கு என்ன நிறம் பிடிக்காது?
அ. கறுப்பு
ஆ. நீலம்
இ. பச்சை
**ஈ.** வெள்ளை நிறம்
**விடை: ஈ.**

359. செந்நாய்க்கு காட்டில் ஏற்பட்ட காயத்திற்கு காரணம் என்ன என்று டாக்டர் கூறினார்?
அ. யானை தாக்கியது
ஆ. பாம்பு தீண்டியது
இ. சிங்கம் தாக்கியது
ஈ. சிறுத்தை தாக்கியது
**விடை: ஈ**

360. காட்டு மிருகங்களுக்கு ஆண்டிபயாட்டிக் ஏன் தேவையில்லை என்று டாக்டர் கூறினார்?
அ. மிருகம் என்பதால்
ஆ. ஒவ்வாமை
இ. பிடிக்காது
ஈ. ரெஸிங்டென்ஸ் என்பதால்.
**விடை : ஈ**

# அலகு _ 4
# இலக்கிய வரலாறு
# பன்னிரு திருமுறைகள்

361.ஆழ்வார்கள் என்பவர் யார்?
அ.திருமாலடியார்கள்
ஆ.சிவனடியார்கள்
இ.சமணர்கள்
ஈ.சித்தர்கள்
**விடை: அ**

362. ஆழ்வார்களின் எண்ணிக்கை எத்தனை?
அ.18 ஆ.12 இ.20 ஈ.24
**விடை: ஆ**

363. ஆழ்வார்களில் பெண்பாலார் யார்?
அ. ஆண்டாள்
.ஆ. நாதமுனி
இ.ஔவையார்
ஈ.காரைக்கால் அம்மையார்
**விடை: அ**

364. நாலாயிரத் திவ்யப் பிரபந்தத்தைத் தொகுத்தவர் யார்?
அ.புத்தர்
ஆ.சமணர்
இ.திருமூலர்
ஈ.நாதமுனிகள்
**விடை: ஈ**

365. முதலாழ்வார் மூவரும் சந்தித்த இடம் எது?
அ. திருக்கோவலூர் இடைகழியில்.
ஆ.திருக்கூர்
இ. தொண்டை நாடு
ஈ. ததிருக்கோவலூர்
**விடை: அ**

366. இரண்டாம் திருவந்தாதி பாடியவர் யார்?
அ. பேயாழ்வார்
ஆ.பூதத்தாழ்வார்
இ.ஆண்டாள்
ஈ.திருப்புளியாழ்வார்
**விடை: அ**

367. திருமழிசை ஆழ்வாரின் சீடர் யார்?
அ. கருடாழ்வார்
.ஆ. வசிட்டர்
இ. குலசேகரர்
ஈ. கணிக்கண்ணன்
**விடை: ஈ**

368. பெரியாழ்வார் மகள் யார்?
அ.ஆண்டாள்.
ஆ.திருமங்கை
இ. யசோதை
ஈ. ஆதிரை
**விடை: அ**

369. பெரியாழ்வார் இயற்றிய நூல்கள் எவை?
அ. விருத்தம்
ஆ.திருவாய்மொழி
இ.திருவிருத்தம்
ஈ. திருப்பல்லாண்டு
**விடை: ஈ**

370. ஆண்டாளுக்குப் பெரியாழ்வார் இட்ட பெயர் என்ன?
அ. மாலை
ஆ.மண்மகள்
இ.வேதவள்ளி
ஈ. கோதை.
**விடை: ஈ**

371. ஆண்டாள் பாடிய பாசுரங்கள் யாவை?

அ. திருவெம்பாவை
ஆ.திருமொழி
இ.திருப்பாவை,நாச்சியார் திருமொழி
ஈ. திருவாசகம்
**விடை: இ**

372. நம்மாழ்வார் பிறந்த ஊர் எது?
அ.திருநகரி
ஆ.திருக்குருகூர்
இ. ஊறையூர்
ஈ. திருமண்டலம்
**விடை: ஆ**

373. நம்மாழ்வாரின் பெற்றோர் யாவர்?
அ. மாறன் காரி, உடைய நங்கை.
ஆ விம்பிசார் கோதை
இ.கம்பநாதர் தேவி
ஈ. பாகவதர் சாலி
**விடை: அ**

374. திருப்புளி ஆழ்வார் யார்?
அ. நம்மாழ்வார் வீற்றிருந்த புளியமரம்.
ஆ.வேம்பு
இ.அரசமரம்
ஈ. ஆலமரம்
**விடை: அ**

375. நம்மாழ்வாரின் சீடர் யார்?
அ. ஆண்டாள்
ஆ. மதுரகவி ஆழ்வார்.
இ.திருமங்கை
ஈ.திருப்புளி
**விடை: ஆ**

376. நம்மாழ்வார் பாடிய நூல் எது?
அ.திருமெழி

ஆ.திருவந்தாதி
இ.திருவாய் மொழி.
ஈ. முகுந்தமாலை
**விடை: இ**

377. திராவிட வேதம் எது?
அ. திருவாய் மொழி
ஆ. திருவாசகம்
இ. திருமுறை
ஈ. திருப்பல்லாண்டு
**விடை: அ**

378. மதுரகவி ஆழ்வார் பிறந்த ஊர் எது?
அ. திருவாதர்
ஆ. திருவாரூர்
இ. திருக்கோளூர்.
ஈ. திருவாலி நாடு
**விடை: இ**

379. மதுரகவி ஆழ்வார் பாடிய நூல் எது?
அ.திருபுராணம்
ஆ. மும்மணிக்கோவை
இ.கண்ணிநுண் சிறுத்தாம்பு
ஈ. பாரத வெண்பா
**விடை அ**

380. நம்மாழ்வாரைத் தெய்வமாகப் போற்றியவர் யார்?
அ.ஆண்டாள்.
ஆ. மதுரகவி
இ. திருமங்கை
ஈ. பபெரியாழ்வார்
**விடை: அ**

381. கள்ளர் மரபில் தோன்றிய ஆழ்வார் யார்?
அ. மதுரகவியாழ்வார்.
ஆ. திருமங்கை ஆழ்வார்

இ. பெரியாழ்வார்
ஈ. ககுலசேகரர்
**விடை: ஆ**

382. திருமங்கையாழ்வார் எந்த நாட்டின் மன்னனாகத் திகழ்ந்தார்?
அ.திருவாலிநாடு
ஆ. சோழ
இ.தொண்டை
ஈ. திருக்குழி
**விடை: அ**

383. திருமங்கை ஆழ்வார் பிறந்த ஊர் எது?
அ. உறையூர்
ஆ. பாக்கம்
இ. சோழ நாடு
ஈ. திருவாலிநாடு
**விடை: ஈ**

384. திருமங்கையாரின் இயற்பெயர் என்ன?
அ. கலியன்.
ஆ. சாத்தன்
இ. திருப்பாண்
ஈ. நாச்சியார்
**விடை: அ**

385. திருமங்கையாருக்கு நாராயணமந்திரம் உபதேசித்தவர் யார்?
அ.புத்தர்
ஆ. சிவன்
இ. மாறன்
ஈ. திருமால்.
**விடை: ஈ**

386. திருமங்கையார் பாடிய நூல்கள் எத்தனை?
அ.8
ஆ.6.
இ 8

ஈ.9

**விடை: ஆ**

387. திருநெடுந்தாண்டகம் பாடியவர் யார்?

அ.ஆண்டாள்

ஆ. குலசேகரன்

இ. மாறன் காரி

ஈ. திருமங்கையார்

**விடை: ஈ**

388. திருவெழுகூற்றிருக்கை பாடியவர் யார்?

அ. திருமங்கையார்.

ஆ.பெரியாழ்வார்

இ. பேயாழ்வார்

ஈ. சசம்பந்தர்

**விடை: அ**

389. விப்ரநாராயணர் யார்?

அ.நம்மாழ்வார்

ஆ.மதுரகவி

இ. திருப்புளி

ஈ தொண்டரடிப்பொடி ஆழ்வார்.

**விடை: ஈ**

390. தொண்டரடிப் பொடி ஆழ்வார் அருளிய நூல்கள் எவை?

அ. திருப்பள்ளி எழுச்சி.

ஆ.திருப்பாவை

இ.திருவாய் மொழி

ஈ பன்னிரு படலம்

**விடை: இ**

391. பாணர் குலத்தில் தோன்றிய ஆழ்வார் யார்?

அ. திருப்பாணாழ்வார்.

ஆ.பொய்கையார்

இ.ஆண்டாள்

ஈ. பெரியாழ்வார்

**விடை அ**

392. அமலனாதிப்பிரான் பாசுரங்களை பாடியவர் யார்?
அ. குலசேகரர்
ஆ. பொய்கையார்
இ. திருப்பாணாழ்வார்
ஈ. நநம்மாழ்வார்
**விடை: இ**

393. திருவஞ்சைக் களத்தில் பிறந்த ஆழ்வார் யார்?
அ. குலசேகர ஆழ்வார்
ஆ.ஆண்டாள்
இ. மதுரகவி
ஈ. திருப்புளியாழ்வார்
**விடை: அ**

394. குலசேகர ஆழ்வார் எந்த நாட்டின் அரசர்?
அ. சேரநாட்டு அரசர்.
ஆ.சோழ நாடு
இ.தொண்டைநாடு
ஈ. பூழி நநாடு
**விடை: அ**

395. குலசேகரர் தமிழில் பாடியுள்ள நூல் எது?
அ. திருப்பாவை
ஆ முகுந்தமாலை
இ. திருப்பதிகம்
ஈ. திருமாலை
**விடை: ஆ**

396. குலசேகரர் வடமொழியில் பாடியுள்ள நூல்?
அ.திருவந்தாதி
ஆ. திருப்பாவை
இ. திருமொழி
ஈ. பெரிய திருமொழி.
**விடை: ஈ**

## நாலாயிர திவ்யப்பிரபந்தம்

397. நாலாயிர திவ்விய பிரபந்தம் பாடல்களை பாடியவர்கள் யார்?
அ. பன்னிரு ஆழ்வார்கள்
ஆ. சமயக்குறவர்கள்
இ. சேக்கிழார்
.ஈ சசிவாச்சாரியார்
**விடை: அ**

398. மணிப்பிரவாள நடையில் உரை எழுதப்பட்ட நூல்
அ) பெரியபுராணம்
ஆ) திருத்தொண்டர் தொகை
இ) நாலாயிர திவ்யபிரபந்தம்
ஈ) சூடாமணி
**விடை: இ**

399. இராமாவதாரத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்ட ஆழ்வார் யார்?
அ. திருமங்கை ஆழ்வார்
ஆ. குலசேகர ஆழ்வார்
இ. பொய்கை ஆழ்வார்
ஈ பூதத்தாழ்வார
**விடை: ஆ**

400. திவ்ய பிரபந்தத்தில் குலசேகர ஆழ்வார் பாடிய நூல் எது?
அ. முகுந்தமாலை
ஆ. பெரிய திருவருட்பா
இ. பெருமாள் திருமொழி
ஈ. மூத்த ததிருமொழி
**விடை: அ**

401. இறைவழிபாட்டில் சடங்கைவிட எதுவே முதன்மையானது?
அ. உள்ளத் தூய்மை
ஆ. உடல் தூய்மை
இ. இறைவழிபாட்டு தல தூய்மை
ஈ.அனைத்தும்
**விடை: ஈ**

402. “வையம் கேளியா வார்கடலே நெய்யாக” எனத் தொடங்கும் பாடலைப் பாடியவர் யார்?
அ. பேயாழ்வார்
ஆ. ஆண்டாள்
இ.பூதத்தாழ்வார்
ஈ பபொய்கையாழ்வார்
**விடை: ஈ**

403. “சுடர் ஆழியான்” எனப் போற்றப்படும் கடவுள் யார்?
அ. திருமால்
ஆ.ஈசன்
இ பிரம்மா
ஈ.முருகன்
**விடை: அ**

404. பொய்கையாழ்வார் பிறந்த இடம் எது?
அ.மதுரை
ஆ. காஞ்சிபுரம்
இ. திருச்சி
ஈ.திருப்பதி
**விடை: ஆ**

405. நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் உள்ள முதல் திருவந்தாதியைப் பாடியவர் யார்?
அ. பொய்கையாழ்வார்
ஆ. பேயாழ்வார்
இ. பூதத்தாழ்வார்
ஈ.ஆஆண்டாள்
**விடை: அ**

406. கல்லை சேர்த்துக் கட்டிக் கடலில் எறிந்தபோது கல்லினை தெப்பமாகக் கொண்டு கரையேறியவர்?
அ.பெரியாழ்வார்
ஆ. அப்பூதியடிகள்
இ. மாணிக்கவாசகர்

ஈ அப்பர்
**விடை: அ**

407. ‘ஒன்று கொலாம்’ என்ற திருப்பதிகத்தைப் பாடியவர் யார்?
அ. சேக்கிழார்
ஆ. திருநாவுக்கரசர்
இ.இளங்கோவடிகள்
ஈ. பாரதியார்
**விடை: ஆ**

408. உலகம் முழுவதையும் ஆளக் கருதுபவர் எதற்காகக் காத்திருக்க வேண்டும்?
அ. படை வரும் வரை
ஆ. காலம் வரும் வரை
இ. பணம் வரும் வரை
ஈ. பலம் வரும் வவரை
**விடை: ஆ**

409. தமிழ் மூவாயிரம் எனப்படும் நூல் எது ?
அ. தேவாரம்
ஆ. திருவாசகம்
இ. திருமந்திரம்
ஈ. ததிருக்குறள்
**விடை: இ**

410. மாகதம் எனப்படுவது
அ.மதுரகவி
ஆ. சித்திரகவி
இ. வித்தாரகவி
ஈ.ஆசுகவி
**விடை: இ**

411. 'கள்ள வேடம் புனையாதே பல
கங்கையில் உன்கடம் நனையாதே
- இதில் 'கடம்' என்பதன் பொருள்
அ. உடம்பு

ஆ. கால்கள்
இ. கைகள்
ஈ. தலை
**விடை: அ**

412. நம்மாழ்வாரைக் கடவுளாகக் கொண்டு பாசுரங்கள் இயற்றியவர?
அ. மதுரகவியாழ்வார்
ஆ.பெரியாழ்வார்
இ. குலசேகராழ்வார்
ஈ. ஆண்டாள்
**விடை: அ**

413. தாண்டகம் பாடிய ஆழ்வார்?
அ. ஆண்டாள்
ஆ. மதுரகவி
இ.திருமங்கை
ஈ. குலசேகரர்
**விடை: இ**

**சைவ திருமடங்களின் தமிழ்ப்பணி**

414. "சைவசித்தாந்தம்" என்னும் தொடரை முதன் முதலில் ஆண்டவர் ?
அ. திருமூலர்
ஆ.திருஞான சம்பந்தர்
இ. திருநாவுக்கரசர்
ஈ. மாணிக்கவாசகர்
**விடை: அ**

415. வீரசைவம் சார்ந்தவர் யார்?
அ. இராமலிங்க அடிகள்
ஆ. குமர குருபரர்
இ. தாயுமானவர்
ஈ. அருணகிரிநாதர்
**விடை: அ**

416. திருவாவடுதுறை ஆதீன மடத்தை நிறுவியவர் யார்?
அ. சிவஞான முனிவர்

ஆ.நமச்சிவாய மூர்த்திகள்.
இ. தேசிகர்
ஈ. மாசிலாமணி
**விடை: ஆ**

417. தருமபுரி ஆதீன மடம் யாரால் நிறுவப்பட்டது?
அ. குருஞான சம்பந்த தேசிகர்
ஆ. சம்பந்தர்
இ. சிவஞானம்
ஈ. ககண்ணப்பர்
**விடை: அ**

418. குருஞான சம்பந்தர் எழுதியுள்ள நூல்கள் எவ்வளவு?
அ.7. ஆ. 8 இ. 3 ஈ. 9
**விடை: ஆ**

419. திருக்குறள் உரைவளம் எனும் நூல் எந்த மடத்தின் சார்பில் வெளியிடப்பட்டுள்ளது?
அ. காசிமடம்
ஆ. திருப்பனந்தாள்
இ. தருமபுர ஆதீன மடம்.
ஈ. திருமடம்
**விடை: இ**

420. தருமபுர ஆதீன மடத்தின் சார்பாக வெளிவரும் இலக்கிய இதழ் எது?
அ. குமரகுருபரன்
ஆ. ஞான சம்பந்தம்.
இ. தீபம்
ஈ. அருள் மொழி
**விடை: அ**

421. ஞான சம்பந்தம் எனும் இலக்கிய இதழ் எத்தனை ஆண்டுக் காலமாக வெளிவருகின்றது?
அ. 42 ஆண்டுகள்.
ஆ. 30 இ. 19 ஈ. 25

**விடை: அ**

422. திருப்பனந்தாள் காசிமடம் யாரால் நிறுவப்பட்டது?
அ. தில்லைநாயக சுவாமிகளால்
ஆ. வச்சணந்தி
இ. ஞானசுந்தரம்
ஈ. ஞான மூர்த்தி
**விடை: அ**

423. தருமபுரத்தின் சிஷ்யமடம் எது?
அ. திருப்பனந்தாள் காசிமடம்.
ஆ. மதுரை மடம்
இ. தருமபுர ஆதீனம்
ஈ. காசிமடம்
**விடை: அ**

424. திருப்பனந்தாள் காசிமடத்தின் சார்பாக வெளிவரும் திங்களிதழ் எது?
அ. குமரகுருபரன்.
ஆ.கணியன்
இ.அமரதீபம்
ஈ சிவபோதசாரம்
**விடை: அ**

425. இன்றுள்ள சைவ மடங்களுள் காலத்தால் முற்பட்ட மடம் எது?
அ. மதுரை மடம்.
ஆ.காசிமடம்
இ. தருமபுர ஆதீனம்
ஈ. திருபனந்தாள் மடம்
**விடை அ**

426. திருஞான சம்பந்தர் திருமடம் என்று வழங்கப்படுவது எந்த மடம்?
அ.சிஷ்ய மடம்
ஆ. மதுரை மடம்
.இ. காசி மடம்
ஈ. திருவாவடுதுறை

**விடை: ஆ**

427. சைவ சித்தாந்த சாத்திரங்கள் எத்தனை நூல்களைக் கொண்டது?
அ. 10 ஆ. 14 இ. 18 ஈ. 15
**விடை: இ**

428. சைவ சித்தாந்த சாத்திரங்களை எவ்வாறு அழைப்பர்?
அ. மெய்கண்ட சாத்திரங்கள்
ஆ.நிகண்டுகள்
இ. சாத்திரங்கள்
ஈ. சைவத்தின் பபெருமை
**விடை: அ**

429. திருவுந்தியாரின்ஆசிரியர் யார்?
அ.திருவியலூர் உய்ய வந்த தேவநாயனார்.
ஆ.திருவுந்தியார்
இ. கொடிக்கவி
ஈ.சிவப்பிரகாசர்
**விடை: அ**

430. திருவந்தியாரின் காலம் எது?
அ. கி.பி. 12 ஆ. கி.பி 7 இ. கி.பி 5 ஈ கி.பி 10
**விடை: ஈ**

431. திருக்களிற்றுப்படியாரின் ஆசிரியர் யார்?
அ. சுப்பிரமணிய தேசிகர்
ஆ. திருக்கடவூர் உய்யவந்த தேவநாயனார்.
இ. ஈசுவர பாரதியார்
ஈ. வேதகிரி
**விடை: ஆ**

432. திருக்களிற்றுப்படியாரின் காலம் என்ன?
அ. கி. பி 16 ஆ. கி. பி 19 இ. கி.பி. 12 ஈ. கி.பி 10
**விடை: இ**

433. சிவஞான போதத்தின் ஆசிரியர் யார்?
அ. அப்பூதியடிகள்

ஆ.மெய்கண்டார்.
இ.கோபாலசாமி
ஈ. அகத்தியர்
**விடை: ஆ**

434. சிவஞான போதத்தின் காலம்?
அ. கி.பி. 13
ஆ. கி.பி 14
இ. கி.பி 19
ஈ. கி.பி 11
**விடைஆ**

435. சிவஞான சித்தியாரின் ஆசிரியர் யார்?
அ. மெய்கண்டார்
ஆ. சிவப்பிரகாசர்
இ, அருள்நந்தி சிவாச்சாரியார்.
ஈ. திருவுந்தியார்
**விடை: இ**

**ஈ. இலக்கண நூல்கள்**

436. காய்கனி இதில் அமைந்துள்ள தொகைநிலைத் தொடரைக் கண்டறிக
அ.வினைத் தொகை
ஆ.உம்மைத் தொகை
இ. உவமைத் தொகை
ஈ. பண்புத் தொகை
**விடை: ஆ**

437. நாற்கரணம் - சாரியாகப் பிரிக்கப்பட்டிருப்பது எது?
அ. நான்கு + அரணம்
ஆ. நான் + கரணம்
இ. நாண் + கரணம்
ஈ. நான்கு + கரணம்
**விடை: ஈ**

438. இறையனார் அகப்பொருள் உரையை எழுதியவர் யார்?
அ. அகத்தியர்

ஆ.இறையனார்
இ.கம்பர்
ஈ. தொல்காப்பியர்
**விடை: ஆ**

439. நன்னூலை எழுதியவர் யார்?
அ. அகத்தியர்
ஆ. குணசாகரர்
இ. பவணந்தி முனிவர்
ஈ. மயிலைநாதர்
**விடை: இ**

440. பவணந்தி முனிவர் பிறந்த ஊர் எது?
அ. சனகாபுரம்
ஆ. மகரவீதி
இ, உடுமலை
ஈ. மதுரை
**விடை: அ**

441. நன்னூலை இயற்ற வேண்டுகோள் வைத்தவர் யார்?
அ. பாண்டிய மன்னன்
ஆ. சேரன்
இ. வேந்தன்
ஈ குறுநில மன்னன் சீவகங்கன்
**விடை: ஈ**

442. 'பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே' என்ற கருத்து இடம் பெறும் இலக்கண நூல் ?
அ. நன்னூல்
ஆ. தொல்காப்பியம்
இ. தண்டியலங்காரம்
ஈ. தொன்னூல் விளக்கம்
**விடை: அ**

443. நன்னூலில் நமக்குக் கிடைப்பன எது?
அ. எழுத்து சொல்

ஆ. பொருள் சொல்
இ. யாப்பு அணி
ஈ. யாப்பு சொல்
**விடை: அ**

444. நன்னூலுக்கு முதன்முதலில் உரை வகுத்தவர் யார்?
-அ. பரிமேலழகர்
ஆ. இளம்பூரணர்
இ. மயிலை நாதர்
ஈ. அமிதசாகரர்
**விடை: இ**

445. தண்டியலங்காரத்தின் ஆசிரியர் யார்?
அ. புத்தமித்திரர்
ஆ. தேவனார்
இ. தண்டி
ஈ. ஆண்டிப்புலவர்
**விடை: இ**

446. வீரசோழியம் எழுதியவர்?
அ. புத்தமித்திரர்
ஆ. மாறன்.
இ. தண்டி
ஈ இறையனார்
**விடை: அ**

447. வீரசோழியம் எத்தனை இலக்கணம் கூறுகிறது?
அ. மூன்று ஆ. இரண்டு
இ. ஐந்திலக்கணங்கள்
ஈ. நான்கு
**விடை: இ**

448. வீரசோழியத்திற்கு உரை எழுதியவர் யார்?
அ. அமிதசாகரர்
ஆ பெருந் தேவனார்
இ. இறையனார்

ஈ. ஐயனாரிதர்

**விடை: ஆ**

449. வீரசோழியம் எழுதிய புத்தமித்திரரின் சமயம் எது?

அ. பௌத்த மதம்

ஆ. சமணம்

இ. சைவம்

ஈ. ஜைனம்

**விடை: அ**

450. ஐந்நிலக்கணத்திற்கும் விளக்கம் கூறிய முதல் இலக்கண நூல்

அ. தொல்காப்பியம்

ஆ. நன்னூல்

இ. வீரசோழியம்

ஈ. கல்லாடம்

**விடை: அ**

451. வீரசோழியத்தின் ஆசிரியர் யார்?

அ.பவணந்தி முனிவர்

ஆ. தொல்காப்பியர்

இ. புத்தமித்திரர்

ஈ. செங்குந்தர்

**விடை:இ**

452. நல்வழி எனும் நூல் எத்தனை பாடல்கள் கொண்டது ?

அ. 41. ஆ. 40 இ. 30 ஈ.

**விடை: அ**

453. 'ஐந்தாம் வேதமா'கக் கருதப்படுவன எவை?

அ. புராணங்கள்.

ஆ. இலக்கணங்கள்

இ. காப்பியங்கள்

ஈ. பெரிய புராணம்

**விடை: அ**

454. தொல்காப்பியத்தில் புராணங்களை எவ்வகைக்குள் சேர்க்கலாம்?

அ. 'தொன்மம்'

ஆ. வரலாறு
இ. நெறிகள்
ஈ. வீடுபேறு
**விடை: அ**

455. யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகையை இயற்றியவர்யார்?
அ. அமிதசாகரர்
ஆ. மயிலை நாதர்
இ. பெருந்தேவனார்
ஈ. திவாகரர்
**விடை : அ**

456. அமிதசாகரர் பிறந்த ஊர் ?
அ. மதுரை
ஆ.தீபங்குடி
இ. பூம்புகார்
ஈ. திருவாரூர்
**விடை: ஆ**

457. உரிச்சொல் நிகண்டை எழுதியவர் யார்?
அ. நவநீதன்
ஆ. உவேசா
இ. காங்கேயர்
ஈ. குணவீரபண்டிதர்
**விடை: இ**

458. சூடாமணி நிகண்டை எழுதியவர் யார்?
அ.இறையனார்
ஆ. மண்டலபுருடர்
இ. ஆண்டிப்பலவர்
ஈ. பெருமண்டூர் மங்கலபுருடர்
**விடை: ஆ**

459. இலக்கணக்கொத்து எனும் நூலை எழுதியவர் யார்?
அ. சுவாமிநாத தேசிகர்
ஆ. பவணந்தி முனிவர்

இ. தண்டி
ஈ. நம்பியார்
**விடை: அ**

460. 'களவியற் காரிகை' என்ற நூல் பெயரை இட்டவர்யார்?
அ. சுவாமிநாதர்
ஆ. திவாகரர்
இ. நம்பியார்
ஈ. உ. வே.சாமிநாதையர்
**விடை: ஈ**

461. 'அறுவகை இலக்கணம்' என்ற நூலின் ஆசிரியர்யார்?
அ. உ. வே.சாமிநாதையர்
ஆ. தொல்காப்பியர்
இ. பவணந்தி முனிவர்
ஈ. காங்கேயர்
**விடை: ஈ**

462. சிற்றிலக்கியங்கள் பெருமளவில் தோன்றிய காலம் எது?
அ. பல்லவர் காலம்
ஆ. சோழர் காலம்
இ. நாயக்கர் காலம்
ஈ. பாண்டியர் காலம்
**விடை: இ**

463. சிற்றிலக்கியங்கள் எத்தனை வகைப்படும்?
அ. 96 ஆ. 75 இ. 50 ஈ. 45
**விடை: அ**

464. கடிகை என்பதன் பொருள் என்ன?
அ. கல்வி நிலையம்
ஆ. மன்றம்
இ. கூடல்
ஈ. முற்றம்
**விடை: அ**

465. கலிங்கத்துப் பரணியைப் பாடியவர் யார்?

அ. ஐயங்கார்
ஆ. ஜெயங் கொண்டார்
இ. ஒட்டக்கூத்தர்
ஈ. குமரகுபரர்.
**விடை: ஆ**

466. முதல் தூது இலக்கியம் எது?
அ. தமிழ்விடு தூது
ஆ. நெஞ்சு விடு தூது
இ. கிள்ளை விடு தூது
ஈ. விறலிவிடுதூது
**விடை அ**

**467.** மூவருலா இயற்றியவர்
அ. ஒட்டக்கூத்தர்
ஆ. கச்சியப்பர்
இ.சுந்தரர்
ஈ. சிவப்பிரகாசர்
**விடை: அ**

468. 'ராட்சசன்' என்று புகழப்படுபவர் யார்?
அ. தஞ்சை வாணன்
ஆ.ஒட்டக்கூத்தர்
இ. நந்திவர்மன்
ஈ. நெடுமாறன்
**விடை: ஆ**

469. நந்திக் கலம்பகம் கூறும் மன்னர் யார்?
அ. பல்லவன்
ஆ. சேரர்
இ. பாண்டியன் .
ஈ. சோழர்
**விடை: அ**

470. அம்மானை இலக்கியத்திற்கு இலக்கணம் வகுத்தவர்
அ. தொல்காப்பியர்

ஆ. வீரமாமுனிவர்
இ. பவணந்தி
ஈ. கல்லாடனார்
**விடை : அ**

471. தூது எத்தனை வகைப்படும்?
அ. 5. ஆ. 2. இ. 7 ஈ. 4
**விடை: ஆ**

## அலகு_ 5
## மொழித்திறன்

472. இலக்கணக்குறிப்பு தருக: பேரொளி
அ. உவமைத் தொகை
ஆ. வினைத் தொகை
இ. வினையாலணையும் பெயர்
ஈ. பண்புத் தொகை
**விடை: ஈ**

473. இலக்கணக்குறிப்பு தருக : ஆடுகொடி
அ. வினைத் தொகை
ஆ. உவமைத் தொகை
இ. ஆகு பெயர்
ஈ. தொழிற்பெயர்
**விடை: அ**

474. இலக்கணக்குறிப்பு தருக: பளபள
அ. அடுக்குத் தொடர்
ஆ. உம்மைத் தொகை
இ. வினைத் தொகை
ஈ. இரட்டைக் கிளவி
**விடை: ஈ**

475.. இலக்கணக்குறிப்பு தருக : இனிய நண்ப
அ. குறிப்பு வினையெச்சம்
ஆ. குறிப்புப் பெயரெச்சம்

இ. தெரிநிலை பெயரெச்சம்
ஈ. எதிர்மறைப் பெயரெச்சம்
**விடை: ஆ**

476.. இலக்கணக்குறிப்பு தருக : காலை மாலை
அ. உருவகம்
ஆ. உம்மைத் தொகை
இ. எண்ணும்மை
ஈ. அடுக்குத்தொடர்
**விடை:;ஆ**

477. இலக்கணக்குறிப்பு தருக : தமிழ் மொழி
அ. இரு பெயரொட்டுப் பண்புத்தொகை
ஆ. ஏவல் வினைமுற்று
இ. உரிச்சொல் தொடர்
ஈ. பண்புத்தொகை
**விடை: அ**

478. இலக்கணக்குறிப்பு தருக : "கலகல"
அ. உவமைத்தொகை
ஆ. இரட்டைக்கிளவி
இ. அடுக்குத்தொடர்
ஈ. சிறப்பும்மை
**விடை: ஆ**

479. இலக்கணக்குறிப்பு தருக :அசைவிலா
அ. பண்புத் தொகை
ஆ. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
இ. வினைமுற்று
ஈ. அடுக்குத் தொடர்
**விடை : ஆ**

480. மலர்ப்பாதம்" இத்தொடர் குறித்த செய்திகளில் எது தவறானது?
1. இத்தொடரில் மலருக்கு பாதம் உவமையாக கூறப்படுகிறது.
2. பாதம் - உவமேயம்
3. மலர் - உவமை

4. போன்ற - உவமஉருபு
அ. அனைத்தும் சரி
ஆ. 1,4
இ. 2,3
ஈ. 3,4
**விடை: அ**

481. கீழ்க்கண்டவற்றுள் பண்பாகு பெயரை குறிக்கும் தொடர் எது ?
அ. கார் அறுத்தான்:
ஆ. மருக்கொழுந்து நட்டான்
இ. மஞ்சள் பூசினாள்
ஈ. வற்றல் தின்றான்
**விடை: ஈ**

482. நெறிப்படுத்தினர் = நெறிப்படுத்து + இன் + அர் " இதில் 'இன்' என்பதன் பகுபத உறுப்பிலக்கணம்
அ. நிகழ்கால இடைநிலை
ஆ. எதிர்கால இடைநிலை
இ. இறந்த கால இடைநிலை
ஈ. எதிர்மறை இடைநிலை
**விடை: இ**

483. குமைந்தனை - குமை + த்(ந்) + த் + அன் + ஐ இதில் 'ஐ' என்பதன் பகுபத உறுப்பிலக்கணம்
அ. முன்னிலை பன்மை வினை முற்று விகுதி
ஆ. முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி
இ. ஏவல் பன்மை வினைமுற்று விகுதி
ஈ. ஏவல் ஒருமை வினைமுற்று விகுதி
**விடை ஆ**

484. மயங்கொலி பிழைகளை திருத்துக

அ. வேலன் நூலகம் சென்று வரிசையாய் அடுக்கி வைத்த புத்தகங்களைக் கண்டு மகிழ்ந்து நின்றான்.
ஆ. வேலன் நூலகம் சென்று வரிசையாய் அடுக்கி வைத்த புத்தகங்களைக் கன்டு மகிழ்ந்து நின்றான்

இ. வேலன் நூலகம் சென்று வரிசையாய் அடுக்கி வைத்த புத்தகங்களைக் கன்டு மகிழ்ந்து நிண்றான்
ஈ. வேலன் நூலகம் செண்று வரிசையாய் அடுக்கி வைத்த புத்தகங்களைக் கன்டு மகிழ்ந்து நின்றான்
**விடை: அ**

485. இலக்கணக்குறிப்புத் தருக
அரும்பும் மலரும், வெப்பம் குளிர்
அ. உம்மைத் தொகை, எண்ணும்மை
ஆ. எண்ணும்மை, உம்மைத் தொகை
இ. எண்ணும்மை , பண்புத்தொகை
ஈ. பண்புத்தொகை, எண்ணும்மை
**விடை: அ**

486. இலக்கணக் குறிப்புத் தருக . ஓதுக, பேசிடுக, ஆழ்க, வாழிய
அ. பெயரெச்சங்கள்
ஆ. வினையெச்சங்கள்
இ. வியங்கோளை வினைமுற்றுகள்
ஈ. வினைத்தொகைகள்
**விடை: அ**

487. இலக்கணக் குறிப்புத் தருக .
பேரன்பு, தமிழ்கவிஞர்
அ. வினைத்தொகை, வினையாலனையும் பெயர்
ஆ. பண்புத்தொகை, வினையாலனையும் பெயர்
இ. பண்புத்தொகை இருபெயரொட்டுப் பண்புத்தொகை
ஈ. வினைத்தொகை, இருபெயரொட்டுப் பண்புத்தொகை
**விடை: இ**

488. பகுபத உறுப்புகளாக பிரித்து எழுதுக செய்வான்
அ. செய்து + ஆன்
ஆ. செய் + வான்
இ. செய்+வ் + ஆன்
ஈ. செய்து + வான்
**விடை: இ**

489. தவறான மரபுச்சொல்லை தேர்க
அ. மாம்பிஞ்சு- மாவடு
ஆ. இளந்தேங்காய் -வழுக்கை
இ. வாழைப் பிஞ்சு- வாழைக்கச்சல்
ஈ. முருங்கைப் பிஞ்சு - முருங்கை மொட்டு
**விடை: இ**

490. இலக்கணக் குறிப்புத் தருக . ஒதுக, பேசிடுக, ஆழ்க, வாழிய
அ. பெயரெச்சங்கள்
ஆ. வினையெச்சங்கள்
இ. வியங்கோளை வினைமுற்றுகள்
ஈ. வினைத்தொகைகள்
**விடை: அ**

491. பொருந்தா இணையைக் கண்டறிக
அ. பரவை - கடல்
ஆ. கரி - நரி
இ. பரி - குதிரை
ஈ. கணை – அம்பு
**விடை: ஆ**

492. 'கொள்' என்ற வேர்ச்சொல்லின் வினை முற்று
அ. கொண்டான்
ஆ. கொள்க
இ. கொண்ட
ஈ. கொண்டு
**விடை: அ**

493. தழையாவெப்பம் தழைக்கவும் – -
இதில் தழை என்பது எவ்வகைச் சொல்?
அ. பெயர்ச்சொல்
ஆ. வினைச்சொல்
இ. இடைச்சொல்
ஈ. உரிச்சொல்
**விடை: ஆ**

494. இலக்கணக் குறிப்புத் தருக.
கடிநகர், சாலத் தகும்
அ. வினைச்சொற்றொடர்கள்
ஆ. உரிச்சொற்றொடர்கள்
இ. வினைத் தொகைகள்
ஈ பண்புத்தொகைகள்
**விடை: ஆ**

495 இலக்கணக் குறிப்புத் தருக.
உருட்டி, ஏகுமின்
அ. பெயரெச்சம், வினையெச்சம்
ஆ. வினையெச்சம், பெயரெச்சம்
இ. வினையெச்சம், ஏவல் பன்மை வினைமுற்று
ஈ. பெயரெச்சம், ஏவல் பன்மை வினை
**விடை: இ**

496. இலக்கணக் குறிப்புத் தருக. பின்னிய, முளைத்த
அ. பெயரெச்சங்கள்
ஆ. வினையெச்சங்கள்
இ. வினைத்தொகைகள்
ஈ. வினைமுற்றுகள்
**விடை: அ**

497. இலக்கணக் குறிப்புத் தருக.
இளமுகம், பேரழகு, முந்நீர், சிறு புல்
அ. பண்புத்தொகைகள்
ஆ. வினையெச்சங்கள்
இ. வினைத்தொகைகள்
ஈ. வினைமுற்றுகள்
**விடை: அ**

498. இலக்கணக் குறிப்புத் தருக.
பூக்குலை, தேன்துளி
அ) 3 ம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை, 2 ம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை

ஆ) 2 ம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை, 3 ம் வேற்றுமைஉருபும் பயனும் உடன்தொக்க தொகை,

இ) இருபெயரொட்டுப் பண்புத்தொகை, 2 ம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை

ஈ) 2 ம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை, இருபெயரொட்டுப் பண்புவினைமுற்றுகள்

**விடை: ஆ**

499. இலக்கணக் குறிப்புத் தருக.

ஆசிலா, ஓவா

அ) வினைத்தொகைகள்

ஆ) வினையெச்சங்கள்

இ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சங்கள்

ஈ) வினைமுற்றுகள்

**விடை: இ**

500. இலக்கணக் குறிப்புத் தருக.

பார்த்து பார்த்து, உழுதுழுது, நில் நில்

அ) இரட்டைக் கிளவிகள்

ஆ) அடுக்குத் தொடர்கள்

இ) உம்மைத் தொகைகள்

ஈ) எண்ணும்மைகள்

**விடை: ஆ**

501. இலக்கணக் குறிப்புத் தருக.

செய்தொழில், அலைகடல், வீழருவி

அ) வினைத்தொகைகள்

ஆ) வினையெச்சங்கள்

இ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சங்கள்

ஈ) வினைமுற்றுகள்

**விடை: அ**

502. இலக்கணக் குறிப்புத் தருக.

வாய்க்கால், ஏகுதி

அ) உரிச் சொற்றொடர், வினையெச்சம்

ஆ) பெயரெச்சம், வினையெச்சம்

இ) இலக்கணப்போலி, ஏவல் ஒருமை வினைமுற்று
ஈ. வினைமுற்று
**விடை: இ**

503. இலக்கணக் குறிப்புத் தருக.
மலையலை, குகைமுகம்
அ) உருவகங்கள்
ஆ) உவமைத் தொகைகள்
இ) உம்மைத் தொகைகள்
ஈ) எண்ணும்மைகள்
**விடை: ஆ**

504. இலக்கணக் குறிப்புத் தருக.
புல்புழு, இராப்பகல்
அ) உருவகங்கள்
ஆ) உவமைத் தொகைகள்
இ) உம்மைத் தொகைகள்
ஈ) எண்ணும்மைகள்
**விடை: இ**

505. இலக்கணக் குறிப்புத் தருக.
நெருநெரு, காலத்தச்சன்
அ) அடுக்குத்தொடர், உவமைத்தொகை
ஆ) இரட்டைக்கிளவி, உருவகம்
இ) இரட்டைக்கிளவி, உவமைத்தொகை
ஈ) அடுக்குத்தொடர், உருவகம்
**விடை: ஆ**

506. இலக்கணக் குறிப்புத் தருக.
புழுக்களும் பூச்சியும், தாங்குதல்
அ) உம்மைத் தொகை, தொழிற்பெயர்
ஆ) எண்ணும்மை, தொழிற்பெயர்
இ) உம்மைத் தொகை, அல் ஈற்று வியங்கோள் வினைமுற்று
ஈ) எண்ணும்மை, அல் ஈற்று வியங்கோள் வினைமுற்று
**விடை: ஆ**

507. பகுபத உறுப்புகளாக பிரித்து எழுதுக ‘முளைத்த’

அ) முளைத்து + அ

ஆ) முளை + த் + அ

இ) முளை + த் + த் +அ

ஈ) முளைத்து + த் + அ

**விடை: இ**

508. பகுபத உறுப்புகளாக பிரித்து எழுதுக ‘ஏகுமின் ’

அ) ஏகும் + மின்

ஆ) ஏகு + ம் + இன்

இ) ஏகும் + ம் + இன்

ஈ) ஏகு + மின்

**விடை: ஈ**

509. " முளைத்த -- முளை + த் + த் + அ" இதில் "த் + த்" என்பதன் பகுபத உறுப்பிலக்கணம் முறையே

அ) சாரியை, இறந்தகால இடைநிலை

ஆ) சந்தி, இறந்தகால இடைநிலை

இ) இறந்தகால இடைநிலை, சந்தி

ஈ) சந்தி, எதிர்கால இடைநிலை

**விடை: ஆ**

510 " ஏகுமின்-- ஏகு + மின் " இதில் 'மின் ' என்பதன் பகுபத உறுப்பிலக்கணம்

அ) ஆண்பால் வினைமுற்று விகுதி

ஆ) பெண்பால் வினைமுற்று விகுதி

இ) ஏவல் வினை முற்று விகுதி

ஈ) பலர்பால் வினைமுற்று விகுதி

**விடை: இ**

511. பகுபத உறுப்புகளாக பிரித்து எழுதுக ‘ விடுத்தனை’

அ) விடுத்து + அனை

ஆ) விடு + த் + அன் + ஐ

இ) விடு + த் + த் + அன் + ஐ

ஈ) விடுத்து + அன் + ஐ

**விடை:இ**

512. பகுபத உறுப்புகளாக பிரித்து எழுதுக ‘சென்’

அ) செல் + ன் +ற

ஆ) சென்று + «

இ) சென் + ற

ஈ) செல்(ன்) +ற்+அ

**விடை: ஈ**

513. ‘விடுத்த’ - விடு + த் + த் + அன் + ஐ" இதில் 'ஐ' என்பதன் பகுபத உறுப்பிலக்கணம்

அ) முன்னிலை பன்மை வினைமுற்று விகுதி

ஆ) முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி

இ) படர்க்கை பன்மை வினைமுற்று விகுதி

ஈ) படர்க்கை ஒருமை வினைமுற்று விகுதி

**விடை: ஆ**

514. சென்ற - செல்(ன்) + ற் + அ " இதில் 'ற்' என்பதன் பகுபத உறுப்பிலக்கணம்

அ) சந்தி

ஆ) சாரியை

இ) இறந்த கால இடைநிலை

ஈ) எதிர்கால இடைநிலை

**விடை: இ**

515. எவ்வகை வாக்கியம் தாய் தாலாட்டுப் பாடினாள்

அ. செயப்பாட்டு வினை வாக்கியம்

ஆ. தன் வினை வாக்கியம்

இ. பிற வினை வாக்கியம்

ஈ.. செய்வினை வாக்கியம்

**விடை: இ**

516. எவ்வகை வாக்கியம்: "ஆண்டாள் மாலை சூடினாள்"

அ. பிறவினை வாக்கியம்

ஆ. எச்சவினை வாக்கியம்

இ. செய்வினை வாக்கியம்

ஈ. . தன்வினை வாக்கியம்

**விடை: ஈ**

517. எவ்வகை வாக்கியம்: அரசன் ஆணையிட்டான்
அ. எச்சவினை வாக்கியம்
ஆ. பிறவினை வாக்கியம்
இ. தன்வினை வாக்கியம்
ஈ. செய்விளை வாத்தியம்
**விடை: இ**

518. எவ்வகை வாக்கியம் : 'மக்கள் காந்தியடிகளைப் போற்றினர்'
அ. செய்வினை வாக்கியம்
ஆ. தன்வினை வாக்கியம்
இ. எச்சவினை வாக்கியம்
ஈ. பிறவினை வாக்கியம்
**விடை: அ**

519. தன்வினை வாக்கியத்தைக் கண்டறிக.
அ. அன்புச்செல்வி கட்டுரை எழுதியுள்ளார்
ஆ. அன்புச் செல்வியால் கட்டுரை எழுதப்பட்டது
இ. அன்புச் செல்வி கட்டுரை எழுதினாள்
ஈ. அன்புச்செல்வி கட்டுரை எழுதுவித்தாள்
**விடை: அ**

520. பிறவினைச் சொற்றொடரைக் கண்டறிக:
அ. எழிலரசி சிலப்பதிகாரம் கற்பித்தாள்
ஆ. எழிலரசி சிலப்பதிகாரம் கற்றாள்
இ. எழிலரசியால் சிலப்பதிகாரம் கற்பிக்கப்பட்டது
ஈ. எழிலரசி சிலப்பதிகாரம் கல்லாள்
**விடை: அ**

521. எவ்வகை வாக்கியம்: பேசாதே
அ. எதிர்மறை வாக்கியம்
ஆ. கட்டளை வாக்கியம்
இ. . உணர்ச்சி வாக்கியம்
ஈ. செய்தி வாக்கியம்
**விடை: ஆ**

522. எண்வகை வாக்கியம் 'அமைச்சரால் விருது வழங்கப்பட்டது'

அ. . பிறவினை வாக்கியம்
ஆ. செய்வினை வாக்கியம்
இ. தன்வினை வாக்கியம்
ஈ. செயப்பாட்டு வினை வாக்கியம்
**விடை: ஈ**

523. எவ்வகை வாக்கியம்: கிளியை பேசப் பழக்கினாள்
அ செயப்பாட்டு வினை வாக்கியம்
ஆ. தன்வினை வாக்கியம்
இ. செய்வினை வாக்கியம்
ஈ. பிறவினை வாக்கியம்
**விடை: ஈ**

524. பிறவினை வாக்கியம் அறிக
அ. அரசர் புலவரைப் போற்றினார்
ஆ.. மாணவர்கள் வகுப்பைத் தூய்மை செய்தனர்
இ. திருக்குறளை போற்றாதவர் இலர்
ஈ. அழகன் பாடலைத் திருத்தினான்
**விடை: அ**

525. 'அமைச்சரால் விருது வழங்கப்பட்டது '- இது எவ்வகை வாக்கியம்?
அ. செய்வினை
ஆ. தன்வினை
இ. செய்ப்பாட்டுவினை
ஈ. பிறவினை
**விடை: இ**

526. 'மக்கள் காந்தியடிகளைப் போற்றினர்'
அ. தன்வினை
ஆ.. பிறவினை
இ. எச்சவினை
ஈ. செய்வினை
**விடை: ஈ**

527. 'நான் பாடல் பாடினேன" - இது எவ்வகை வாக்கியம்
அ. எச்சவினை

ஆ. முற்றுவினை
இ. பிறவினை
ஈ. செய்வினை
**விடை: ஈ**

528. 'சிலை சிறப்பியால் செதுக்கப்பட்டது' இது எவ்வகை வாக்கியம்
அ. எச்சவினை
ஆ. செயப்பாட்டுவினை
இ.செய்வினை
ஈ. எதிர்மறைவினை
**விடை: ஆ**

529. இராவணன் இராமனால் கொல்லப்பட்டான்' - இது எவ்வகை வாக்கியம்?
அ. செய்வினை
ஆ.. எதிர்மறைவினை
இ. செயப்பாட்டுவினை
ஈ. செயப்பாட்டுவினை
**விடை: ஆ**

530. பேசாதே - இது எவ்வகை வாக்கியம்.
அ . கட்டளை
ஆ. உணர்ச்சி
இ. செய்தி
ஈ. எதிர்மறை
**விடை: அ**

531. மாற்று உடை தருவாயா' - எவ்வகை வாக்கியம்?
அ . கொடை வினா வாக்கியம்
ஆ. கொளல் வினா வாக்கியம்
இ. ஐயவினா வாக்கியம்
ஈஅறியா வினா வாக்கியம்
**விடை: ஆ**

532. செய்வினை வாக்கியத்தைக் கண்டெழுதுக
அ. அறம் அரசனால் பேணப்பட்டது
ஆ. . அரசன் அறத்தை பேணினான்

இ. அரசே! அறத்தைப் பேணுக
ஈ. அறத்தைப் பேணுவது அரசனின் கடமை
**விடை: ஆ**

533. எவ்வகை வாக்கியம்? அவள் பாடாமல் இருந்திலள்.
அ. எதிர்மறைத் தொடர்
ஆ. பொருள் மாறா எதிர்மறைத் தொடர்
இ. உடன்பாட்டுத் தொடர்
ஈ. கலவைத் தொடர்
**விடை: ஆ**

534. இராசராசன் பெரிய கோயிலைக் கட்டுவித்தான் வாக்கிய வகை அறிக
அ. செய்வினை
ஆ. . செயப்பாட்டுவினை
இ. பிறவினை
ஈ. எதிர்மறைவினை
**விடை: ஆ**

535. வாக்கிய அமைப்பினைக் கண்டறிக. "ஆண்டாள் மாலை சூடினாள்"
அ. எச்சவினை
ஆ. செய்வினை
இ. தன்வினை
ஈ. பிறவினை
**விடை: ஆ**

536. பிறவினை வாக்கியத்தைக் கண்டறிக
அ. வண்டியை உருட்டினான்
ஆ. வண்டியை உருட்டுவித்தான்
இ. வண்டி உருட்டப்பட்டது
ஈ. உருட்டினான் வண்டியை
**விடை: இ**

537. பண்புத்தொகைக்கு பொருந்தாத சொல்லைக் கண்டறிக.
அ. ஆடுகொடி
ஆ. வட்டப்பலகை
இ. தண்ணீர்

ஈ. எண்கரம்

**விடை: அ**

538. சந்திப்பிழை இல்லாத தொடரைத் தேர்ந்தெடு.

அ. எட்டுதொகையுள் பதிற்றுப்பத்துச் சுவடியும் ஒன்று

ஆ. எட்டுத்தொகையுள் பதிற்றுபத்து சுவடியும் ஒன்று

இ. எட்டுத்தொகையுள் பதிற்றுப்பத்துச் சுவடியும் ஒன்று

ஈ. எட்டுதொகையுள் பதிற்றுப்பத்து சுவடியும் ஒன்று

**விடை: இ**

539. சந்திப்பிழை இல்லாத தொடரைக் காண்க.

அ. விடையை தேடிப்பார்க்கக் கடினமாக இருந்தது.

ஆ. விடையைத் தேடிப்பார்க்கக் கடினமாக இருந்தது

இ. விடையைத் தேடிபார்க்கக் கடினமாக இருந்தது

ஈ. விடையைத் தேடிப்பார்க்க கடினமாக இருந்தது

**விடை: ஆ**

540. சந்திப்பிழையைச் சரிபார்த்து எழுதுக.

அ. மருந்துவப்படிப்பிற்கு என்னைத் தேர்வு செய்தனர்

ஆ. மருந்துவபடிப்பிற்கு என்னைத் தேர்வு செய்தனர்

இ. மருந்துவப்படிப்பிற்கு என்னைத் தேர்வு செய்தனர்

ஈ. மருத்துவபடிப்பிற்கு என்னைத் தேர்வு செய்தனர்

**விடை: ஈ**

541. மரபுப் பிழையற்றதை எடுத்து எழுதுக.

அ. பலா மூசு

ஆ. அவரைப் பிஞ்சு

இ. முற்றிய தேங்காய்

ஈ. முருங்கைப் பிஞ்சு

**விடை: ஈ**

542. மரபுப்பிழை இல்லாத தொடர் எது?

அ. பூந்தோப்பு

ஆ. மாஞ்சோலை

இ. கம்பங்கொல்லை

ஈ. பனந்தோட்டம்

**விடை: இ**

543. ஒருமை பன்மை பிழையை நீக்குக.
அ. புலிகள் இரண்டும் வருகின்றது
ஆ. நானும் அவனும் வந்தோம்
இ. மயில்கள் அகவுகிறது
ஈ மேற்கூறிய எதுவும் இல்லை
**விடை:ஈ**

544. ஒருமை பன்மை பிழை நீக்குக.
அ. அதுகள் இங்கே உள
ஆ. அவை இங்கே உள்ளன
இ. அதுகள் இங்கே உள்ளன
ஈ. அதுகள் இங்கே உள்ளது
**விடை: ஆ**

545. . ஒருமை பன்மை பிழை இல்லாத தொடர் எது?
அ. துள்ளுகிற மாடு பொதி சுமக்காதவை
ஆ. துள்ளுகிற மாடு பொதி சுமக்காது
இ. துள்ளுகிற மாடுகள் பொதி சுமக்காது
ஈ. இவற்றுள் எதுவுமில்லை
**விடை: ஆ**

546. தன்வினை வாக்கியத்தைக் கண்டறிக.
அ. செழியன் ஊஞ்சல் ஆடுகிறான்
ஆ. செழியன் ஊஞ்சலை ஆட்டுகின்றான்
இ. செழியன் ஊஞ்சல் ஆடான்
ஈ. ஊஞ்சல் செழியனால் ஆட்டப்பட்டது
**விடை: அ**

547. வாக்கிய அமைப்பினைக் கண்டறிதல் 'இனியன் உண்ணா நின்றான' எவ்வகை வாக்கியம் எனச் சுட்டுக.
அ. செய்தி வாக்கியம்
ஆ. உடன்பாட்டு வாக்கியம்
இ. உணர்ச்சி வாக்கியம்
ஈ. எதிர்மறை வாக்கியம்

**விடை: ஈ**

548. வாக்கிய அமைப்பினைக் கண்டறிதல் கபிலரும் பரணரும் பாடிய பாடல்கள் புறநானூற்றில் இடம் பெற்றுள்ளன.

அ. கலவை வாக்கியம்

ஆ. தனி வாக்கியம்

இ. செய்தி வாக்கியம்

ஈ. தொடர் வாக்கியம்

**விடை: இ**

549. ஈன் குழவி - என்பதன் இலக்கணக் குறிப்பு தருக.

அ. உவமைத்தொகை

ஆ. வினைத்தொகை

இ. பண்புத்தொகை

ஈ. உம்மைத்தொகை

**விடை: ஆ**

550. பின்வரும் இலக்கணக் குறிப்புக்குப் பொருந்தாத சொல்லைத் தேர்க.

அ. பொங்கு கடல்

ஆ. செய்வினை

இ. தேன்குடி

ஈ. வருபுனல்

**விடை: ஆ**

551. பின்வரும் இலக்கணக் குறிப்புக்குப் பொருந்தாத சொல்லைக் கண்டறிக.
உரிச்சொற்றொடர்

அ. புன்கண்

ஆ. நனிகடிது

இ. மல்லல்

ஈ. தடக்கை

**விடை .இ**

552. 'முத்தமிழ்' எனும் சொல்லின் இலக்கணக் குறிப்பு யாது?

அ. வினைத்தொகை

ஆ. உவமைத்தொகை

இ. பண்புத்தொகை

ஈ. உம்மைத்தொகை

**விடை: இ**

553. பிரித்து எழுதுக. நாற்கரணம்

அ. நால் + கரணம்

ஆ. 'நான்கு + கரணம்

இ. நாற்கு + கரணம்

ஈ. நாள் + கரணம்

**விடை: ஆ**

554. வழுவற்ற தொடர் எது?

அ. பனை இலையால் கூரை போட்டனர்

ஆ. பனை ஓலையால் கூரை வேய்ந்தனர்

இ. பனை இலையால் கூரை கட்டினர்

ஈ. பனை ஓலையால் கூரை முடுக்கினர்

**விடை: ஆ**

555. திணையின் உட்பிரிவு---

அ) உயர்திணை

ஆ)எண்

இ) பால்

ஈ)இடம்

**விடை: அ**

556. உயர்திணைப் பால் பகுப்பில் அமைந்த சொல் வரிசையைத் தேர்ந்தெடுக்க

அ) வீரன், புறா, மலை

ஆ) யானை, ஆடவர், தலைவி

இ) கல்,மண், மரம்

ஈ) ஆண், பெண், மகள்

**விடை: ஈ**

557. அஃறிணைக்குரிய பால்பகுப்புகள்

அ)ஒன்றன்பால், பலவின்பால்

ஆ) ஆண்பால், பலர்பால்

இ) பெண்பால், பலவின்பால்

ஈ) பலர்பால், பெண்பால்

**விடை: அ**

558. இடம் எத்தனை வகைப்படும்

அ)2

ஆ.4

இ. 3

ஈ. 7

**விடை: இ**

559. வந்தேன்,வந்தோம் என்பன

அ)தன்மை பெயர்கள்

ஆ) தன்மை வினைகள்

இ)முன்னிலைப் பெயர்கள்

ஈ) முன்னிலை வினைகள்

**விடை: ஆ**

560. இலக்கண முறையுடன் பிழையின்றி பேசுவதும் எழுதுவதும் ஆகும்.

அ)வழு

ஆ) வழாநிலை

இ) வழுவமைதி

ஈ) இயல்பு வழக்கு

**விடை: ஆ**

561. இலக்கண முறை இன்றிப் பேசுவதும் எழுதுவதும்

அ) வழு

ஆ) வழாநிலை

இ) இயல்பு வழக்கு

ஈ) தகுதி வழக்கு

**விடை: அ**

562. இலக்கண முறைப்படி பிழையுடையது எனினும் இலக்கண ஆசிரியர்களால் ஏதேனும் ஒரு காரணம் கருதி, பிழையன்று என ஏற்றுக் கொள்ளப்படுவது

அ) வழுவமைதி

ஆ) வழாநிலை

இ) வழு
ஈ) மரபுவழி
**விடை:அ**

563. குடியரசுத் தலைவர் நாளை தமிழகம் வருகிறார் என்பது
அ) திணை வழுவமைதி
ஆ) பால் வழுவமைதி
இ) இட வழுவமைதி
ஈ) கால வழுவமைதி
**விடை: ஈ**

564. 'சாலப் பசித்தது' இலக்கணக்குறிப்பு வரைக
அ) உரிச்சொல்
ஆ) உரிச்சொல் தொடர்
இ) இடைச்சொற்றொடர்
ஈ) பெயரெச்சத் தொடர்
**விடை: ஆ**

565. 'மழை போல் வழங்கினார்' காட்டும் பொருளைத் தேர்க
அ] உண்மை
ஆ) வண்மை
இ) அன்பு
ஈ) திண்மை
**விடை: ஆ**

566. அந்தக் கட்டடத்தின் மதிப்பு எவ்வளவு? வாக்கிய வகை தேர்க
அ] தன்வினை வாக்கியம்
ஆ] பிறவினை வாக்கியம்
இ] வினா வாக்கியம்
ஈ) செய்தி வாக்கியம்-
**விடை:இ**

567. வழூஉச் சொற்களை நீக்கு
அ. புழக்கடைப் பக்கம் பேயமாதே
ஆ. புறக்கடைப் பக்கம் போகாதே
இ. பிடிக்கடைப் பக்கம் போகாதே

ஈ. புலக்கடைப் பக்கம் போகாதே

**விடை ஆ**

568. மரபுப் பிழைகளை நீக்கும்

தென்னங்கன்று நட்டேன்

தென்னம் பிள்ளை நட்டேன்

தென்னஞ்செடி நட்டேன்

தென்னை ஓலை நட்டேன்

**விடை ஆ**

569. மரபுப் பிழையற்ற தொடரைக் கண்டு வட்டமிடும்க

அ.நாய் கரைந்ததைக் கேட்டுக் கோழிக்குட்டி

ஆ. நாய் கூவியதைக் கேட்டுக் கோழிப்பிள்ளை பயந்தது

இ. நாய் குரைதத்தைக் கேட்டுக் கோழிக்குஞ்சு

ஈ. நாய் குரைத்ததைக் கேட்டுக் கோழிக் கன்று பயந்தது

**விடை இ**

570. வழு இல்லாத தொடரில் வட்டமிடுக

அ. நண்செய்

ஆ. நல்ல செய்

இ.நன்செய்

ஈ. நன்னசெய்

**விடை இ**

571. பிழையற்ற வாக்கியத்தைத் தேர்வு செய்க.

அ. குளகரையில் கொக்கு பறந்து சென்றது

ஆ. குளக்கரையில் கொக்குப் பறந்துச் சென்றது

இ. குளக்கரையில் கொக்கு பறந்து சென்றது.

ஈ. ஏல குளக்கரையில் கொக்கு பறந்துச் சென்றது

**விடை ஆ**

572. மரபுப்பிழைகள், வழூஉச் சொற்களை நீக்குக.

அ. கடையில் சீயக்காய்ப் பொட்டலம் வாங்கி வா

ஆ. கடையில் சீகைக்காய்ப் பொட்டலம் வாங்கி வா

இ. கடையில் சிகைக்காய்ப் பொட்டலம் வாங்கி வா

ஈ. கடையில் சீயக்காப் பொட்டலம் வாங்கி வா

**விடை இ**

573. மரபுப் பிழைகள் அற்ற தொடரைக் குறிப்பிடுக.
அ. குதிரை கத்தும்
ஆ. குதிரை குரைக்கும்
இ. குதிரை கனைக்கும்
ஈ. குதிரை பிளினும்
**விடை இ**

574. சரியான திருத்தம் பெற்ற வழூஉசொல் தேர்ந்தெடு
அ. சிங்கக்குட்டி
ஆ. சிங்கக் குருளை
இ. சிங்கப்பிள்ளை
ஈ. சிங்கக் கன்று
**விடை ஆ**

575. மரபுப் பிழை நீங்கிய சொல் எது?

அ. முருங்கையிலை
ஆ. முருங்கைக்கீரை
இ. முருங்கைத் தழை
ஈ. முருங்கை ஓலை
**விடை ஆ**

576. மரபுப்பிழை நீங்கிய தொடர் எது?
அ. கோழிக்குட்டி பசுங்குட்டி
ஆ. கோழிக்குஞ்சு பசுங்கள்று
இ. கோழிக்குஞ்சு, பசுங்குட்டி
ஈ. கோழிக்குஞ்சு, பசுங்கன்று
**விடை ஈ**

577. மரபுப்பிழை இல்லாத தொடரைக் கண்டுபிடி
அ. சாலையில் இடதுபக்கம் நட
ஆ. சாலையின் இடப்பக்கம் நட
இ. சாலையின் இடதுபக்கம் போ
ஈ. சாலையின் இடதுபக்கம் நட

**விடை ஆ**

578. மரபுப்பிழை நீங்கிய தொடர் எது?
அ. காகம் கூவும் குயில் சுத்தும்
ஆ .காகம் சுத்தும், குயில் கரையும்
இ. காகம் கரையும், குயில் கூவும்
ஈ. காகம் கரையும், குயில் பேசும்
**விடை இ**

579. மரபுப்பிழை இல்லா தொடரைக் காண்க
அ. சுவறில் எழுதாதே
ஆ. சுவரில் எழுதாதே
இ. சுவட்றில் எழுதாதே
ஈ. சுவர்றில் எழுதாதே
**விடை ஆ**

580. வழூஉச் சொல் நீங்கிய தொடரை எழுது
அ. இன்னிக்கு வாங்கினேன் அவரக்கா
ஆ. இன்றைக்கு வாங்கினேன் அவர்க்காய்
இ. இன்று அவரைக்காய் வாங்கினேன்.
ஈ. இன்று அவரைக்காய் வாங்கினேன்.



ஆசிரியர் அறிமுகம்

முனைவர் செ.புனிதா எலிசபெத் கடலூர் மாவட்டத்தில் நெய்வேலியில் வசிக்கும் திரு சி.செல்வமணி, திருமதி குமாரி தம்பதியருக்கு மூத்த மகளாக பிறந்தவர். இவர் இளங்கலை, முதுகலை, ஆய்வியல் நிறைஞர், முனைவர் பட்டம் ஆகியவற்றை விருத்தாசலம் திரு கொளஞ்சியப்பர் அரசு கலைக் கல்லூரியில் பயின்றார். 'சங்க இலக்கிய குறிஞ்சித்திணைப்பாடல்கள் காட்டும் வாழ்வியல்' இவரது முனைவர் பட்ட ஆய்வுத்தலைப்பாகும். கவிதை கட்டுரை எழுதுவதில் ஆர்வம் கொண்ட இவர் பல கருத்தரங்குகளில் பங்கேற்று ஆய்வுக்கட்டுரைகளை வழங்கியுள்ளார். 'வள்ளலார் 200-கவிதை' என்ற நூலில் தம் கவிதையை வழங்கி 'கவி நேய விருது' பெற்றுள்ளார். தற்போது ஓசூரில் உள்ள செயின்ட் ஜோசப் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் தமிழ்த்துறையில் உதவிப்பேராசிரியராகப் பணியாற்றி வருகின்றார்

9 789334 014761